
# ஒரு மனித்தியாலத்தின் அவசியம்

## ஓர் திறந்த கடிதம்

## சகல தலைவர்களுக்கும் சகல மக்களுக்கும்





உலக ஒத்துழைப்பு மன்றம்

இலங்கையின் சமாதானத்திற்கும், நீதிக்குமான

இலங்கைக் குழு

உ. ஒ. ம. / இல.



முன் அட்டை படம்

யுத்தத்துயரத்தில் சிக்குண்டுள்ள இலங்கை எல்லைக்கிராம வாசிகளின் துன்பத்தை சித்தரிக்கும் காட்சிகள், சித்திரங்கள் சம்பாஷனையில் கலந்து கொள்வதுடன் துன்பங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் நீதியையும் விடுதலையும் சமாதானமும் கிடைக்கப்பெறும்.
(பொலனறுவ பாலுகஸ்டமான சந்தான குமாரசிறியின் ஆக்கம்)

# தற்போதைய உடனடித் தேவை
# ஒரு பகிரங்கக் கடிதம்

**சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், மத, சமூக அமைப்புக்கள், குழுக்களுக்கும், ஊடகங்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும்.**




இலங்கையில் நீதிக்கும் சமாதானத்துக்குமான
உலக ஒத்துழைப்பு மன்றம்.
இலங்கைக் குழு
டபிள்யூ.எஸ்.எப்/எஸ்.எல்.


06.10.2001

# தற்போதைய உடனடித் தேவை

# ஒரு பகிரங்கக் கடிதம்

**சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், மத, சமூக அமைப்புகள், குழுக்களுக்கும், ஊடகங்களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும்.**

**சகல தலைவர்களுக்கும், பொதுமக்களுக்கும்,**

## போராடும் இயல்பு.

உலகின் மிகவும் பலம் பொருந்திய தேசத்தின் உயிர்நாடியாகிய உலக வர்த்தக நிலையத்தின் இரட்டைக் கோபுரங்கள் மீதும் அமெரிக்க இராணுவ மையமான பெண்டகன் மீதும் இடம்பெற்ற போராளிகளின் பாரிய சேதத்தை விளைவித்த தாக்குதல் **இன்று உலகில் நிலவும் போராடும் இயல்பையும், அதன் சவால்களுக்குத் தீர்வு காணவேண்டிய அவசரத் தேவையையும் புரிந்து கொள்ள வேண்டிய அவசியத்தை வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.**

## பயங்கரவாதத்துக்கெதிரான பூரண யுத்தம்?

பல உலகத் தலைவர்கள், பிரத்தியேகமாக அரசியல் தலைவர்கள் சகல தேசங்களும் ஒன்றுபட்டு பயங்கரவாதத்துக்கெதிரான யுத்தத்தைப் பல முனைகளிலும் முன்னெடுக்கவேண்டிய தேவையை வலியுறுத்தியுள்ளனர். பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் ஆதிக்கம் என்னும் அச்சமூட்டும் சாத்திய நிகழ்வுகளை முன்னெடுக்கும் அமெரிக்க ஜனாதிபதியே இவையனைத்துக்கும் தலைமை தாங்குபவராக விளங்குகிறார். அமெரிக்க காங்கிரஸ் முன்னிலையில் அவர் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள் கீழே தரப்படுகின்றன.

> "நாம் தேவையான சகல போராயுதங்களையும் பயன்படுத்துவோம்"
>
> "அமெரிக்கர்கள் ஒரு சமரை மாத்திரம் எதிர்பார்க்கக்கூடாது. இது நாம் இதுகாலவரை கண்டிராத ஒரு நீண்டகால யுத்தமாகும்."
>
> "சகல பிராந்தியங்களிலுமுள்ள சகல நாடுகளும் இப்பொழுது முடிவெடுக்கவேண்டும். நீங்கள் எமது பக்கத்தில் நிற்பதா அல்லது பயங்கரவாதிகளின் பக்கத்தில் நிற்பதா என்பதே இந்த முடிவாகும்."
>
> "இது உலகத்தின் போராட்டமும், நாகரிகத்தின் போராட்டமுமாகும்."
>
> "இதன் முடிவு நாம் அனைவரும் நன்கறிந்த ஒன்றாகும்......... கடவுள் நடுநிலையாளர் அல்லவென்பது எமக்குத் தெரியும்."

இந்த வார்த்தைகள் உலக மக்கள் அனைவரும் நன்கறிந்தவாறு உலகின் பல பகுதிகளில் ஊழல் மற்றும் சர்வாதிகார ஆட்சிக் கும்பல்களைப் பதவியில் அமர்த்துவதற்குப் பேருதவி செய்த ஒரு தேசத்தின் ஜனாதிபதியின் வாயிலிருந்து வந்தவையாகும். அமெரிக்கா ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யர்களை வெளியேற்றுவதற்கும், தலிபான் குழுவை அங்கு ஆட்சியிலமர்த்துவதற்கும் ஒசாமா பின்லேடனுக்கும், அவரின் அல் - காயிதா அமைப்புக்கும் உதவிகளும், பயிற்சியும் வழங்கி அவர்களை உபயோகித்துக் கொண்டதும் உலகறிந்த விடயமாகும். இதே ஆட்கள் தாம், தற்போது தம்மைத் தாக்கியுள்ளார்களென்றும், அவர்களை அழிக்க வேண்டுமென்றும் கூறுகின்றனர். ஆயினும் தாக்குதலில் அவர்கள் தான் ஈடுபட்டார்கள் என்பதை நிரூபிப்பதற்கும் இதுவரையில் திடமாக முடிவுறுத்தும் ஆதாரமோ, சான்றுகளோ எதுவுமே கிடையாது.

ஆயினும், பலர் பல்வேறு கரிசனைக் கவலைகளை வெளியிட்டுள்ளனர். போராடுமியல்பின் வரலாற்று, பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியான காரணங்களைப் பகுப்பாய்வு செய்து, அவற்றை இல்லாதொழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென்று இவர்கள் கூறுகின்றனர். தண்டிக்கும் நடவடிக்கை எதிர்பார்ப்பதற்கு நேரெதிரான பலனையே ஏற்படுத்துமென்பதும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. தீவிரப்போக்காளர்களின் வாதங்களுக்குப் பிரித்தானிய மக்கள்சபை உறுப்பினர் ஒருவர் பதிலளித்துள்ளார். முதலாவது சந்தேக நபரென்று அமெரிக்கா வர்ணித்துள்ள ஒசாமா பின்லேடனை அழித்தாலும் அவருக்குப் பதிலாக இஸ்லாமிய உலகம் முழுவதிலும் ஆயிரக்கணக்கான பின்லேடன்கள் தோன்றுவார்களென்று அவர் கருத்துத்தெரிவித்துள்ளார். இதை நாகரிகத்துக்கும் ஏனையோரக்கு மிடையிலான போரொன்றோ, அல்லது ஒரு (கிறிஸ்தவ) நாகரிகத்துக்கும் இன்னுமொரு (இஸ்லாம்) நாகரிகத்துக்குமிடையிலான போரென்றோ அழைக்க முடியாதென்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"இந்தப் பயங்கரவாதங்களுக்கிடையிலான மோதலை நாகரிகங்களுக்கிடையிலான மோதலென்று கூறமுயல்வோமாயின், அது எம்மை நாமே கேலிப் பொருட்களாக மாற்றுவதாக அமையும்."
(சுவாமி அக்னிவேஷ் மற்றும் வண. வால்சன் தம்பு).

## இயையுள்ள கேள்விகள்

போராடும் இயல்பு என்னும் விடயமும் அதற்கான காரணங்களும் மிகவும் சிக்கலானவை ஆகும். 'பயங்கரவாதம்' என்ற பெயரை, நினைத்தவாறு பயன்படுத்துவது உண்மைகளை வெளிக்கொணர்வதற்குப் பதிலாக அவற்றை மூடிமறைக்கவே துணைபுரியும். 'வன்செயல் மலிந்த இலங்கை' (உபதலைப்பு 'படுகொலைகள் தினம்') என்று தலைப்பிடப்பட்ட 1971 ஜேவீபீ எழுச்சியின் பகுப்பாய்வு இன்னமும் பெறுமதிமிக்கவையாகவுள்ள வினாக்களை எழுப்பியது:

**"தவறாக வழிநடத்தப்படுவோர் யார்?
பயங்கரவாதிகள் யார்?
திருடர்கள் யார்?
புனர்வாழ்வு அவசியப்படுவது யருக்கு?"**

அமெரிக்காவில் இடம்பெற்ற தாக்குதலின் பின்னர் இதுவே வரலாற்றில் இடம்பெற்ற மோசமான காட்டுமிராண்டித்தனமான பயங்கரவாதத் தாக்குதல் என்று கூறப்பட்டது. ஆயினும், **ஹிரோஷிமா மற்றும் நாகசாக்கி தாக்குதல்கள் எத்தகையவை? நாஜிகளின் நடத்தை எத்தகையது? இத்தகைய குற்றச் செயல்களைப் புரிந்தோர் மூன்றாம் உலக நாடுகளைச் சேர்ந்தோரல்லர் என்பது உண்மையாகும்.**

## கண்ணுக்குப் புலனாகாத அல்லது மறைந்திருக்கும் பயங்கரவாதம்

அவசியமான, அவசரமான மாற்றங்களைத் தடுத்து நிற்கும் (அதிகார பலமுடையோர் ஒளிந்து நிற்கும்) சமூகக் கட்டமைப்புகள் என்ற **"கண்ணுக்குப் புலனாகாத" மறைந்திருக்கும் பயங்கரவாதமும் உள்ளதென்பதோடு, இது வன்செயல் தன்மையில்** எந்த விதத்திலும் குறைந்ததல்ல என்பதும் உண்மையாகும்.

> "அமெரிக்கா இன்று உலகிலேயே பெரிய பணக்காரத் தேசமாகும். பல நூறு கோடிகளுக்குச் சொந்தமான 170 பேர் அங்கு உள்ளனர். 250,000 கோடீஸ்வரர்கள் அங்கு உள்ளனர். மேலும், 9,000,000 இலட்சாதிபதிகளும் அங்கு உள்ளனர். அதன் மிகப் பெரிய செல்வந்தர்கள் மூவரின் செல்வத்தின் ஒட்டுமொத்தத் தேறிய பெறுமதி உலகிலுள்ள 48 ஏழை நாடுகளின் மொத்த தேசிய உற்பத்திக்கும் கூடுதலானதாகும். பிரத்தியட்சமாகவே அமெரிக்கா உலகின் 'ஒளிவிளக்கு' என்ற வகையில் தீவிர சுயநலம் மற்றும் பதவி, சலுகை இலட்சியத்துக்காகத் தீவிரமாகச் செயலாற்றி உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்களைச் சுரண்டிக் கொழுத்தது அனைவரும் நன்கறிந்த விடயமாகும். தற்போதும் உள்ளூர் மற்றும் சர்வதேச சமூக அமைப்பில் மாற்றம் ஏற்பட்டு தமது அடிமை நிலை மாறுதென்று காத்திருக்கும் கோடானுகோடி மக்களின் குரலை நசுக்குவதில் அமெரிக்கா முன்னணியில் நிற்பதும் ஒன்றும் இரகசியமல்ல.
>
> இந்த நிலைமை சகித்துக் கொள்ளப்பட முடியாத ஒன்று என்பதோடு, அமெரிக்கா, ஜீ-7 நாடுகள், மற்றும் இச்சதியில் கூட்டாளிகளான சர்வதேச அமைப்புகளான ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஜீஏரீரீ அமைப்பு, மற்றும் இதன் வாரிசாகிய உலக வர்த்தக ஸ்தாபனம் என்பவை மனிதாபிமானமுள்ள, நீதியான, நிலையான உலகை ஏற்படுத்த விரும்பாத பட்சத்தில் இது தொடரும் என்பதும் நிச்சயமாகும். ஏழைகளின் குரல் என்றாவது ஒரு நாள் உலகில் செவிமடுக்கப்படும் குரலாக மாறியே தீரும்"
>
> ("அபிவிருத்தியின் மறுபக்கம்" - கலாநிதி. மேர்வின் டி சில்வா, லோகொஸ், பாகம் 39. இல.1, பக்கம் - 45.)

## பென்டகன்

"அமெரிக்க அரசாங்கத்தின் இராணுவத் தலைமையகமாகிய பென்டகன் உலகில் ஏனைய நாடுகள் அனைத்தினதும் ஒட்டுமொத்தப் பாதுகாப்புச் செலவினத்துக்கு அதிகமாகப் பாதுகாப்பு ஆராய்ச்சியில் செலவிட்டு வருகின்றதென்றும், இது ஒரு வேளை முன்னாள் அமெரிக்க ஜெனரல் மாக்ஸ்வெல் டி டெய்லர் கூறியவாறு **"செல்வந்த சக்தியென்ற வகையில் அமெரிக்கா பொறாமைமிக்க, வறிய சக்திகளுக்கெதிராகத் தனது தேசிய சொத்துக்களைப் பாதுகாக்கப் போரிடவேண்டியுள்ளது என்பதன் யதார்த்தமாகுமென்றும்"** எழுத்தாளர் சுட்டிக் காட்டுகிறார்.

## முதனிலை மற்றும் இரண்டாம் நிலைப் பயங்கரவாதம்.

இத்தகைய நிகழ்வுண்மைகளும், உளப்பாங்குகளும் மக்கள் சாதாரணமாகப் 'பயங்கரவாதம்' அல்லது 'இரண்டாம் நிலைப் பயங்கரவாதம்' என்று அழைக்கப்படுவதை, 'முதனிலைப் பயங்கரவாதம்', 'அரசு பயங்கரவாதம்' அல்லது 'சர்வதேச பயங்கரவாதம்' (உதாரணமாகப் போர்த் தளபாடக் கைத்தொழில்) என்பவற்றிலிருந்து வேறுபடுத்தி அறிந்து கொள்வதற்கு மக்களுக்கு உதவி புரிதல் வேண்டும். முதனிலைப் பயங்கரவாதமே இரண்டாம் நிலைப் பயங்கரவாதத்தை உருவாக்குகின்றது என்பது உணர்ந்து கொள்ளப்படுதல் வேண்டும். **இது தற்போது கூறப்படும் இரண்டாம் நிலைப் பயங்கரவாதிகள் மீதான முதனிலைப் பயங்கரவாதிகளினதும் அவர்களின் கூட்டாளிகளினதும் அனைத்துமடங்கும் யுத்தப் பிரகடனத்தின் மீதான அதீத தேவையற்ற ஆதரவுணர்வை மட்டுப்படுத்துதல் வேண்டும். நாம் மேலே குறிப்பிட்ட, பிரத்தியட்சமாகப் பழுதற்ற ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாக வலம்வரும் மேற்கு நாடுகள் இன்னமும் தம்மை ஜனநாயகம் மற்றும் சுதந்திரத்தின் போர் வீரர்களாக அழைத்துக்கொள்ள முடியுமாயின், ஒசாமா பின்லேடனும், அவரின் அல் - காயிதா இயக்கமும், வேலுப்பிள்ளை பிரபாகரனும் அவரின் எல்ரீரீ இயக்கமும் தம்மை மூன்றாம் உலக நாடுகளின் விடுதலைக்காகப் போராடும் சக்திகளென்று அழைத்துக்கொள்ள முடியும். வாழ்வில் நிலவும் சிக்கல்கள் இத்தகையனவாகவே உள்ளன.** இது சரியானதற்கும் பிழையானதற்குமிடையிலோ, ஒளிக்கும் இருளுக்குமிடையிலோ நிகழும் போராட்டமல்ல.

## அடிப்படைப் பொறுப்பு

இச்சந்தர்ப்பத்தில் நாம் (உலக ஒருமைப்பாட்டு மன்றம் / இலங்கைப் பிரிவு) இலங்கையில் உள்ள பௌத்தம், இந்து மதம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் என்ற நான்கு பிரதான மதங்களையும் சேர்ந்தவர்கள் என்ற வகையில் **அடிப்படையில் அஹிம்சைக் கோட்பாடுகளுக்கு பெரிதும் அர்ப்பணிப்புக் கொண்டவர்கள்** என்பதையும், பரந்துபட்ட முற்போக்கான பொது நலன் மற்றும் மனித உரிமை இயக்கங்களில் ஈடுபாடு கொண்டோர் என்பதையும் பெறுமதி மிக்க இலட்சியமும் வரலாற்றும் பாரம்பரியமுமாகிய ஜனநாயக வாழ்க்கை முறைக்கு (கட்டுப்பாடுகள் இருந்தபோதிலும்) அர்ப்பணிப்பு உணர்வு கொண்டவர்கள் என்பதையும் திடமாகக் கூறுதல் வேண்டும். ஆயினும் எவ்வகையிலும் நாம் எம்மை நன்நடத்தையின் மேன்மைமிக்க உதாரணங்களாகக் கருதவில்லை. நாம் ஜனநாயகத்தை மதிக்கும் அதேவேளையில் மேற்குறிப்பிட்டவாறு அது நடைமுறைப்படுத்தப்படும் விதத்தில் பாதூரமான குறைபாடுகள் நிலவுவதையும் காணாமல் இருக்க முடியாது. **அதே நேரத்தில் நீதிக்கும், சமாதானத்துக்குமான போராட்டத்தில் அர்ப்பணிப்புக்கான தேவையையும்** நாம் தெளிவாகக் காண்கிறோம். இதற்கான சூழ்நிலைகள் எழும்போது, இதற்கான தேவை சகல மதங்களினதும் வேத உரைகளிலும், மதக்கலப்பற்ற ஐ.நா.மனித உரிமைகள் சாசனத்திலும் மிகத் தெளிவான கட்டளைகளாகத் தரப்பட்டுள்ளன.

### எதிர்த்துப் போராடும் உத்தி

போராட்டத்தின் முக்கியத்தை வலியுறுத்தும் அதே வேளையில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான பொறுமையற்ற முதிர்ச்சியற்ற பிரயத்தனங்களை நாம் ஆதரிக்க விரும்பவில்லை. **மக்களோடு கலந்தாலோசித்து எதிர்ப்பு மற்றும் போராட்டம் சம்பந்தமாக சரியான உத்திகள் வகுக்கப்பட வேண்டும் என்பதை நினைவில் இருத்துவது அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.** மதியூகமற்ற குறுக்கு வழிகள், நேரெதிர் விளைவுகளையே தோற்றுவிக்கும் என்பதோடு, அடக்கு முறை மற்றும் உண்மையான புரட்சிகர சக்திகள் மீது சேறு பூச முயற்சி செய்யும் மக்களுக்கெதிரான சக்திகளின் செயற்பாடுகளுக்கு உதவி புரிவதாகவே அமையும். ஆகவே பயமுறுத்தும் இயக்கங்களும், பிரத்தியேகமாக சாதாரண சிவிலியன்கள் மீதான தான்தோன்றித்தனமான தாக்குதல்களும் படுகொலைகளும் அவை அரசு அடக்கு முறைகளால் சீண்டிவிடப்பட்டவை என்ற உண்மை இருந்த போதிலும் குறுகிய காலத்தில் சில குறிப்பிட்ட வெற்றிகளைக் கொணரக்கூடியவையாக இருப்பினும் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் வெற்றியளிக்கமாட்டா. இறுதியில், தீவிர இடதுசாரி வழி முறைகள், தீவிர வலதுசாரி நடைமுறைகளிலிருந்து பிரித்தறிய முடியாத தன்மையையே எடுக்கின்றன. அவை இரண்டுமே பிற்போக்கு வாதிகளுக்குத் துணை செல்வதோடு, முற்போக்குவாத மக்கள் இயக்கங்களின் இலட்சியங்களுக்கு தீங்கு விளைவிப்பவையாகும். அவை இரண்டையும் நாம் கண்டிக்க வேண்டும்.

சமூக சூழ்நிலைகள் முதிர்ச்சியடைந்து பரந்து பட்ட வெகு ஜனங்களின் புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பு என்பவை இருந்தால் மட்டுமே பயனுறுதியுள்ள மாற்றங்கள் சாத்தியமாகும். ஆகவே, நீதி மற்றும் சமாதான இலட்சியத்துக்கு அர்ப்பண உணர்வு கொண்டோர் மக்களின் அன்றாட பிரச்சனைகள் குறித்து அவசரமாகவும் மேலும் அதிகரித்த முறையிலும் பணியாற்றுவதோடு தொழிலாளர், விவசாயிகள், புத்தி ஜீவிகள், மத குருமார் மற்றும் வரலாற்றுப் போக்கை அறிந்து கொண்டோர் போன்ற வெகு ஜனங்களோடு சேர்ந்து பணியாற்றி, மக்களின் உடனடிப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு உதவக்கூடிய சமூக மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு சாத்தியமான சகல சட்டநிலைத்தகவுள்ள வழிகளிலும் முயற்சியெடுத்தல் வேண்டும்.

ஆயினும், எல்ரீரீஈ மற்றும் ஜேவீபீ இயக்கங்களின் பயங்கரவாத வழிமுறைகளைக் கண்டிப்போர், இந்த இளைஞர்கள் அதிகரிக்கும் விரக்தியின் விளிம்புக்குத் தள்ளப்பட்டுள்ளனரென்பதை மறந்துவிடுதல் ஆகாது என்பதையும் இங்கு கூறுதல் வேண்டும். இந்த விரக்தியுணர்வே இவர்கள் இத்தகைய வழிமுறைகளை நாடுமாறு தூண்டுகிறது. வயதும், முதிர்ச்சியும் கொண்ட ஏனையோர் அஹிம்சை ரீதியான மாற்றுவழிகளைப் பொறுமையாகத் தேடுவர். ஆயினும், பல இளைஞர்களும், இளைஞரல்லாத சிலரும் அவ்வாறு செயற்படுவதில்லை. விசேடமாக, விடயங்களின் போக்கு தமக்கெதிராகத் திரும்புகையிலும், தடைகள் மிகப் பாரதூரமாக அவர்களுக்கெதிராக எழும்போதும், நடைமுறைச் சாத்தியமான மாற்றுவழியெதுவும் இல்லாதவிடத்திலும், தமது இலட்சியத்தில் பெரும் நம்பிக்கை கொண்டுள்ள சந்தர்ப்பங்களில் ஏதாவது செய்தாக வேண்டுமென்ற மூர்க்க நிலையில் இத்தகைய வழிகளை நாடுகின்றனர்.

### அன்பின் உண்மை

மேலும், மேற்கு நாடுகள் மற்றும் எமது சொந்தத் தலைவர்கள் குறித்த எமது விமர்சனம் வெறுப்புணர்விலிருந்தோ, பொறாமை காரணமாகவோ எழவில்லையென்பதையும், உலகிலுள்ள சகல மக்களுக்கும் நீதியும், சமாதானமும் கிட்டவேண்டுமென்ற இலட்சியத்துக்காக உண்மையைத் தேடுவதில் தெளிந்த மனதோடு கூடிய பகுப்பாய்வுக் கடமையிலிருந்தே அவை எழுகின்றனவென்பதை மிகத் தெளிவாகக் கூறுதல் வேண்டும். **“அதை அன்பின் உண்மையைக் கூறும் முயற்சி” என்றும் கூறலாம். (பைபிளில் நன்கு அறியப்பட்ட ஒரு மேற்கோள், எபேசியர் 4.15).**

### ஆழ்ந்த கவலை

மேற்கிலோ, கிழக்கிலோ எமது சமூகங்களில் சகல வடிவங்களிலுமான வன்செயல்கள் காரணமாக **ஆழமான துயரத்தையும், வேதனையையும், இழப்புக்களையும் அனுபவிக்கும் சகல மக்கள் குறித்தும், பிரத்தியேகமாக அப்பாவிச் சிவிலியன் மக்கள் குறித்து நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.** என்பதை நான் வலியுறுத்துதல் வேண்டும். ஆயினும், உண்மையில் யார் தாக்குதல்களில் ஈடுபட்டார்கள் என்பதை அறிந்துகொள்ளாது சகல மூலைகளிலிருந்தும் எழும் உடனடி, பகுப்பாராய்வற்ற, சிந்தனையற்ற, சுய - தார்மீகக் கண்டனங்களை நாம் ஆதரிக்கவில்லை. **விசேடமாக இத்தகைய கண்டனங்கள் வன்செயலற்ற சமூகத்தை ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களைக் கொண்டுவருவது குறித்து எதுவித அர்ப்பணிப்புணர்வற்றவர்களும், வன்செயல் கட்டமைப்புகளில் நேரடியாக, ஆழமான சம்பந்தமுற்றவர்களுமான பேர்வழிகளிடமிருந்து எழும் பழிவாங்குதல், மற்றும் தண்டித்தல் குறித்த கோரிக்கைகளுக்கு எமது ஆதரவு இல்லை.**

### சமாதானத்துக்கான நிலைப்பாடு

**மேற்கு நாடுகளினதும், மூன்றாம் உலக நாடுகளினதும் பரந்துபட்ட எண்ணிக்கையிலான மக்கள் சில சந்தர்ப்பங்களில் தமது சொந்த, மோசமான நோக்கங்களைக் கொண்ட சிறுபான்மை** தீவிரவாதக் குழுக்களினால் திசை திருப்பப்பட்ட போதிலும் அவர்களே யுத்தத்தினால் பெரிதும் பாதிப்புறுவோர் என்றவகையிலும், அவர்களே ஒருவருக்கொருவர் தேவைகளை அறிந்து உதவுவோர் என்ற வகையிலும் சமாதானத்தை ஆதரிப்பவர்களாகவே உள்ளனர். மறுபுறத்தில் பரந்துபட்ட வெகு ஜனங்களின் சமாதானத் தாகம் சில வேளைகளில் மேல்மட்டத்திலுள்ள தலைவர்களிடமிருந்தும் மிகவும் ஆக்கபூர்வமான சிந்தனா முறையில் வெளிப்படுகின்றன. இது இருட்டில் வாழுவோருக்கு எதிர்காலம் சம்மந்தமான நம்பிக்கை ஒளிக்கீற்று ஆகும். உயிரிழந்த பிரித்தானிய மக்களின் நினைவாக நியூ யோர்க், சென்ற் தோமஸ் பேராலயத்தில் இடம்பெற்ற ஞாபகார்த்த ஆராதனை, இத்தகைய ஒரு சந்தர்ப்பமாகும். வெகுதூர தேசங்களிலுள்ள மக்களும் இதைத் தொலைக்காட்சியில் கண்டனர். அது நிகழ்ந்த சம்பவத்தின் பயங்கர அவலம் குறித்த பூரண உணர்வோடு, அன்பின் கருப்பொருள் குறித்த அர்த்தமுள்ள வேதவாசகங்கள், மற்றும் இசைமேன்மையோடு கூடிய, அழகும் மதிப்பும் செறிந்த ஓர் ஆராதனையாக விளங்கியது. அந்தவேளையில் ஊடகங்களில் தொனித்த அதிகாரம் படைத்தோரின் பீதியூட்டும் ஆக்கிரமிப்புக் கருத்துக்களோடு ஒப்பிடுகையில், இந்த ஆராதனை ஓர் அற்புதச் சாதனையென்றே கூறவேண்டும். ஆக்கிரமிப்புக் கருத்துக்களை அமெரிக்க ஜனாதிபதியோடு போட்டிபோட்டு வெளிப்படுத்திக் கொண்டிருந்த பிரித்தானியப் பிரதமர்கூட மிகவும் மதிப்புள்ள ஓர் உரையை ஆற்றி, பிரபல எழுத்தாளர் ஒருவரின் உண்மையான அன்பு குறித்த கருப்பொருளடங்கிய மேற்கோள் ஒன்றையும் பயன்படுத்தினார். இதே பணியிலான இங்கிலாந்து மகாராணியின் அர்த்தம் பொதிந்த செய்தியொன்றும் அங்கு வாசிக்கப்பட்டது. அது கௌரவம் மற்றும் ஆழமான சிந்தனையினது மாதிரியாக அமைந்திருந்தது. இவை அனைத்தும் ஓர் இருண்ட சமுத்திரத்தில், நம்பிக்கை ஒளிக்கீற்றாக விளங்கியது. இது அமெரிக்கா, மற்றும் பிரித்தானியா பொது மக்களின் அன்புக்கும், சமாதானத்துக்குமான ஆழமான நம்பிக்கையை மிகத் தெளிவான முறையில் வெளிப்படுத்தும் ஓர் ஆராதனையாக அமைந்தது என்றே நாம் எண்ணுகின்றோம்.

### இலங்கை நிலைமை

இலங்கையில் நாம் ஆயுதப் போராளிகளின் நடவடிக்கைகளுக்கு மிகவும் பழக்கப்பட்டவர்களாவோம். மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவீபீ) இரு எழுச்சிகள் 1971இலும் 1987 - 89 இலும் இடம் பெற்றன. இவை அடக்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் புலிகளின் (எல்ரீரீஈ) எழுச்சி கடந்த இருபது வருடங்களாகத் தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றது. அவர்களின் கெரில்லா மற்றும் நேரடிப் போராட்டங்களுக்கு மேலதிகமாக எல்ரீரீஈ அமைப்பு 66 தற்கொலைக் குண்டுத்

தாக்குதல்களையும் நடாத்தியுள்ளது. (18.09.2001 டெய்லீ நியூஸ்). உலகில் இதுவரை இடம் பெற்ற தற்கொலைக்குண்டுத் தாக்குதல்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு புலிகளின் தாக்குதல்களாகும். (தி ஐலன்ட், 21.09.2001). மொத்தமாக 229 தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. (25.09.2001 டெய்லி நியூஸ்). அவை பொருளாதார இலக்குகள், பிரபல அரசியல் பிரமுகர்கள், ஒரு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள், இரு புனித பௌத்த வணக்கத்தலங்கள், பாதுகாப்புச் சேவை இலக்குகள் மற்றும் ஆளணியினருக்கெதிரான தாக்குதல்களாகும். இத்தாக்குதல்களில் பெருந்தொகையினரான சிவிலியன்களும் பலியாகியுள்ளனர். முழு யுத்தத்திலும் 60,000 பேர் இறந்துள்ளனர். 1983 இல் நூறு கோடி ரூபாவாகவிருந்த அரசாங்க யுத்தச் செலவினம் இன்று 8,400 கோடியாக அதிகரித்துள்ளது. சொத்துக்களுக்கும், சூழலுக்கும், பொருளாதாரத்துக்குமான சேதம் மற்றும் இழப்பு, மனிதர்களுக்கு ஏற்பட்டுள்ள துயரங்கள் மற்றும் மன அதிர்ச்சிகள் நினைத்துப் பார்க்கவோ, அளவிடவோ முடியாத அளவுக்குப் பயங்கரமானவையாகும். இதேவேளையில், வன்செயல் கலாச்சாரமும் சமூக விழுமியங்களின் சீரழிவும் அதிகரித்த வேகத்தில் பரவி வருகின்றன.

## நாம் எப்பொழுது கற்றுக்கொள்ளப் போகிறோம்?

**நாம் எப்பொழுது கற்றுக்கொள்ளப் போகிறோம்? மனிதப் படுகொலைகள் நிறுத்தப்பட்டு சமாதானம் ஈட்டப்படுவதற்குப் பொறுப்பானவர்கள் தமது கண்களைத் திறந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்னர் இன்னும் எத்தனை ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் உயிரிழக்க வேண்டும்? இன்னும் எத்தனை குடும்பங்கள் சிதறுண்டு போக வேண்டும்? பொருளாதாரத்துக்கு இன்னும் எத்தனை அழிவுகளும், பின்னடைவுகளும் ஏற்படவேண்டும்?** தெற்கில் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசிய கட்சியும், சமீபத்திலிருந்து மக்கள் விடுதலை முன்னணியும் சமாதானத்திற்குப் பொறுப்பானவையாக விளங்குகின்றன. தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளும், ஏனைய சிறிய அரசியல் குழுக்களும் வகிக்கவேண்டிய பாத்திரமும் உள்ளது. மத, கலாச்சாரத் தலைவர்களும், புத்தி ஜீவிகளும், உயர் வாழ்க்கைத் தொழில் வல்லுநர்களும், வியாபார சமூகத்தினரும், கமக்காரர்களும், தொழிற் சங்கவாதிகளும் சிவில் சமூக அமைப்புகள் மற்றும் ஊடகங்களும் தமது பங்களிப்பை வழங்குதல் வேண்டும். மேலும், சாதாரண மக்களும் தீர்க்கமான ஒரு பங்கை வழங்கவேண்டியுள்ளது. அவர்களை ஏனையோர் தவறாக வழிநடத்த முடியும் என்ற போதிலும், அவர்களே அரசாங்கங்களைத் தெரிவுசெய்கின்றனர். அவர்கள் தம்மை அணிதிரட்டி அரசாங்கத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்க வேண்டும்.

## தோல்விக்கான பொறுப்பு

இறுதியாக எல்ரீரீஈ அமைப்புக்கும் தீர்மானகரமான ஒரு பாத்திரம் உள்ளது. தெற்கிலிருந்து வரும் நியாய பூர்வமான விருப்பறிவிப்புகளுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டியது மிக முக்கியமானதாகும். இது வரையில் சமாதானப் பேச்சு வார்த்தைகளும், ஏனைய நடவடிக்கைகளும் தோல்வி கண்டதற்கு அவர்கள் பொறுப்பல்ல என்ற விடயத்தை மிகத் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். ஆயினும், அவர்களே பொறுப்பாளிகள் என்ற பரவலான நம்பிக்கை ஒன்று உள்ளது. ஐலன்ட் ஆசிரியர் தலையங்கம் ஒன்று பின்வருமாறு கூறியது:

> "பயங்கரவாதிகளோடு பேச்சு வார்த்தையை நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள், எல்ரீரீஈ இயக்கத்தோடு இதுவரை நடந்த பேச்சுவார்த்தைகளால் எதுவித பயனும் ஏற்படவில்லை என்று கூறுவதால் அவர்களின் நிலைப்பாட்டை நியாயப்படுத்தலாம். சகல சந்தர்ப்பங்களிலும் எல்ரீரீஈ அமைப்பே பேச்சுவார்த்தைகளை முறித்துக் கொண்டது. எல்ரீரீஈ இயக்கத்தைப் பொறுத்தவரையில், பேச்சு வார்த்தை என்பது கஸ்டமான சூழ்நிலைகளை தடுப்பதற்கான ஒரு வழியாகும். (21.09.2001)

ஆயினும் உண்மை நிலை என்ன? 1948ல் சுதந்திரம் கிடைத்த காலம் தொட்டு எல்ரீரீ உருவாகுவதற்கு முன்னர் இருந்தே **இன்று வரை தமிழ் மக்களைத் தெற்கின் அரசாங்கங்கள் மீண்டும், மீண்டும், ஏமாற்றி வந்துள்ளன.** இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான பிரதான அரசாங்கக் கட்சியின் முயற்சியைப் பிரதான எதிர்க்கட்சி தோற்கடித்து வந்துள்ளது. கட்சிகளின் உள்ளேயே எதிர்ப்புகள் தோன்றியுள்ளன. பரஸ்பர நம்பிக்கையான அடிப்படை உத்தரவாதம் ஏதாவது உள்ளதா? பரஸ்பர நம்பிக்கை இல்லாமல் சமாதானம் ஏற்பட வழி இல்லை. **நாம் விளங்கிக் கொள்ள வேண்டிய பிரதான உண்மை என்னவென்றால், தெற்கின் இரு பிரதான அரசியல் கூடாரங்களுக்கிடையிலான கருத்தொருமிப்பின் அடிப்படையிலான, வடக்கின் மக்களின் அடிப்படையான நியாய பூர்வமான கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய உறுதியான விருப்பறிவிப்பு எதுவுமே இதுவரை இல்லை என்பதாகும். இத்தகைய ஓர் உறுதியான விருப்பறிவிப்பு மட்டுமே வெற்றிகரமான சமாதானப் பேச்சு வார்த்தைகள் குறித்த நியாயமான நம்பிக்கையை ஏற்படுத்த முடியும்.**

### விடயத்தின் செறிந்த சாராம்சம்.

**இதுவே விடயத்தின் செறிவான சாராம்சமாகும். யுத்தத்தை நிறுத்துமாறும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறும் மட்டும் கேட்டு இயக்கம் நடத்துவது அறவே போதாது.** சமாதானப் பேச்சுவார்த்தைகளில் தட்டிக்கழிக்க முடியாத, குறித்துரைத்த கோரிக்கைகள் சம்பந்தமான விடயங்களுக்கு, தெற்கின் மக்கள் தமது கண்களைத் திறக்க வேண்டும். இவை பல தசாப்த காலமாக உலகெங்குமுள்ள ஏனைய நாடுகளினதும் இலங்கையிலுள்ள பொறுப்பு வாய்ந்த அதிகார அமைப்புகளினதும் ஆய்வு, விவாதம் மற்றும் உரையாடற் பொருளாக இருந்து வந்துள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து, தீர்மானங்களை எடுக்க முடியாதென்றால், மூன்றாந்தரப்பு மத்தியஸ்தத்துடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குச் சென்றும் எதுவித பயனும் இருக்கப் போவதில்லை. **சாதாரண மக்கள் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் நன்கு புரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் கொண்டவர்களாவர்.**

### குறித்துரைத்த கோரிக்கைகள் - நம்பிக்கையை உருவாக்குதல்.

தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டிய குறித்துரைத்த கோரிக்கைகளும், பிரச்சினைகளும் எவை? இவை நாடெங்கிலுமுள்ள பல பிரதேசங்களில், சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கலந்து கொண்ட எமது அமைப்பின் அடிமட்டத்திலான கருத்தரங்குகள், செயற்கள அமர்வுகள் மற்றும் பொதுக்கூட்டங்களில் கருத்தொருமிப்பு ஏற்பட்ட விடயங்கள் என்பதை இங்கு கூறுதல் வேண்டும். தமிழ் சிறுபான்மையினருக்கு மொழி, காணி, கல்வி மற்றும் வேலைவாய்ப்பு விடயங்களில் பாரபட்சங்கள் விளைவிக்கப்பட்டதென்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, அதிகாரப்பகிர்வு இடம்பெற வேண்டுமென்பதும் அங்கீகரிக்கப்பட்டது.

மேலும், நாட்டின் அநேகமான பகுதிகளில் அதிகாரப் பகிர்வு இடம்பெறவேண்டுமென்பதோடு, வடக்கு - கிழக்கில் மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பால் தீர்மானிக்கப்படாத ஒரு புவித்தொடர்பு நிலையும், நிலைதகவுமுள்ள அதிகாரப் பகிர்வு அலகும், ஐக்கிய இலங்கைக்குள் மத்திய அரசுடனான பரஸ்பர ஆதார உறவினுள் அபிவிருத்திக்கான நியாயமான, சுயாட்சிமுறை மிக, மிக அவசியமென்பது மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளப்பட வேண்டும். அளவு, எல்லைகள் மற்றும் ஏனைய அவசிய விடயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறலாம். தெற்கிலுள்ள பெரும்பான்மைச் சிங்களத் தலைவர்கள் இவற்றை ஒரு நம்பிக்கை உணர்வில் வழங்கத் தயாரென்றால், சிறுபான்மைத் தலைவர்கள் ஒரு நம்பிக்கையுணர்வில் ஒரு பதில் நடவடிக்கைச் செயல்முறைக்குச் சம்மதிப்பதோடு, தமது கோரிக்கைகள் குறித்து நெகிழ்ச்சிகரமான ஓர் அணுகுமுறையைக் கடைப்பிடிப்பார்கள். இவ்வாறாக பரஸ்பரம் ஒருவர் மீதொருவர் தங்கி நிற்கும் உறவுமுறையினுள் இத்தகைய ஓர்

ஏற்பாடு இடம்பெற்றால், அது திம்புவில் தமிழ் மக்களின் கோரிக்கைகளின் சராம்சத்தை உள்ளடக்குவதாகவும் அமையும். சமாதானப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைவதற்குத் தமிழர்களும், எல்ரீரீஈ இயக்கமுமே பொறுப்பென்று அடிக்கடி குறைகூறப்படுகின்றது. ஆயினும், இது ஒரு நியாயமான குற்றச்சாட்டு அல்ல. மீண்டும் மீண்டும் வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டது தென்பகுதி அரசாங்கங்களேயாகும். தெற்கின் கருத்தொருமிப்பு அடிப்படையிலான, பரஸ்பர தங்கிநிற்றல் உறவுமுறையுள் அமைந்த, நியாயமான சுயாட்சி குறித்த விருப்பறிவிப்பை இதுவரை எந்த அரசாங்கமும் செய்யவில்லை. நம்பிக்கையை உருவாக்கும் முன்முயற்சியை எடுக்கவேண்டியது தெற்கிலுள்ள பெரும்பான்மை மக்களின் பொறுப்பாகும். நம்பிக்கை, மேலும் நம்பிக்கையை வெகுமதியாகப் பெற்றுக்கொள்ளுகின்றது. பரஸ்பர நம்பிக்கையைக் கட்டியெழுப்பும்போது, முழு நிலைமையும் மாற்றமடைகின்றது. நடைபெறாதென்று நினைத்த விடயங்களும் சாத்தியமாகும்.

**எல்ரீரீஈ அமைப்பின் பதில் நடவடிக்கை**

இத்தகைய பின்னணியில் அல்லது நம்பிக்கை அடிப்படையில் பார்வைக்குத் தீர்க்கப்பட முடியாதவை போன்ற பல்வேறு பிரச்சனைகளுக்கு எல்ரீரீஈ நியாயமான முறையில் சாதகமான பிரதிவிளைவைக் காட்டுமென்று எதிர்பார்க்கலாம். திம்புக் கோட்பாடுகளின் முக்கிய விடயமாகிய நியாயமான அளவு சுயாட்சியை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியுமென்பதால், ஒரு வரட்டுத் தத்துவார்த்த நிைப்பாட்டைக் கடைப்பிடித்து திம்புக் கோட்பாடுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்தமாட்டார்களென்று எதிர்பார்க்க இடமுண்டு. அவர்கள் சிங்கள, தமிழ் மக்கள் இரு சாராரும் இணைந்து கட்டியெழுப்பியதும், கடந்த காலத்தில் இரு சாராருக்குமே பெருமளவில் பயனுள்ளதாக விளங்கியதுமான ஒரு தேசத்தைப் பிரிப்பது சிறந்ததல்ல வென்பதை அங்கீகரிப்பார்களென்றும் எதிர்பார்க்கலாம். சில வருடங்களுக்கு முன்னர் பீ.பீ.சீ.க்கு வழங்கிய பேட்டியொன்றில் தமிழ்மக்களுக்கு நியாயமான சுயாட்சி வழங்கப்பட்டால் அவர்கள் இலங்கை அரசுடன் தொடர்ந்தும் சேர்ந்து வாழத் தயாராகவுள்ளார்களென்று வேலுப்பிள்ளை பிரபாகரன் தெரிவித்திருந்தார். சமீபத்தில் தமிழ்மக்கள் தமது தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிடத் தயாராகவுள்ளார்களாவென்று ஆயர் கெனத் பெர்னாண்டோ வினவியபோது, பிரபாகரன் இதேவிதமான உறுதிமொழி ஒன்றை வழங்கினார். அன்டன் பாலசிங்கமும் இதே விடயத்தைப் பல தடவைகள் எடுத்துக் கூறியுள்ளார்.

இந்த உறுதி மொழிகளை நாம் நம்பாமல் விடுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. திடமான கருத்தொருமிப்பின் அடிப்படையில் தெற்கின் பிரதான அரசியற் கட்சிகள் தமக்குரிய கடப்பாட்டை நிறைவேற்றினால் இதில் பிரச்சினை எதுவுமே எழப்போவதில்லை. தமக்கு நீதியான ஒரு தீர்வு கிட்டும்போது, வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ் மக்கள் தாம் ஒரு சிறு தனியான சுதந்திர அரசாக இருப்பதைவிட, இந்தியாவோடு இணைப்பு ஏற்படுத்திக் கொள்வதைவிட, இலங்கை அரசோடு ஐக்கியமுற்றிருப்பதில் பல்வேறு அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமென்று உணர்ந்து கொள்ளுவர். ‘மேலும், இத்தகைய ஓர் அலகின் நடைமுறைச் சாத்தியம் மற்றும் நிலைதகவு என்பவை நிச்சயமற்றவை என்பதையும் அவர்கள் அறிந்து கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு சரியான பிரதி விளைவொன்று தெற்கிலிருந்து வருவதற்குத் தாமதமாவது தொடரும்போது மட்டுமே வடக்கின் சாதகமான பிரதி விளைவை எதிர்பார்ப்பது கஷ்டமாகும்.

ஏற்கெனவே பெருமளவு காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. மீண்டும், மீண்டும் சீரழிந்த நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு மதியூகமும், பொறுமையும் வாய்ந்த பேச்சுவார்த்தைகள் அவசியப்படும். ஒரு முன் நிபந்தனையாக ஆயுதக் களைவையோ, ஆயுதங்கள் நிலத்தில் வைப்பதையோ கோரமுடியாது. இதைக் கட்டம் கட்டமான அல்லது படிப்படியான ஒரு செயல் முறையாகவே நிறைவேற்ற முடியும். அதேவேளையில் அதிகாரப் பகிர்வுச் செயல்முறை நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் விதத்தில் இடம் பெறுதல் வேண்டும்.

பாதுகாப்புப் படைகளையும், ஊர்காவற் படைகளையும், எல்ரீரீஈ அமைப்பையும் சேர்ந்த ஆளணியினருக்கு படைக் கலைப்பு இடம்பெற்ற பின்னர் வேலைவாய்ப்பு வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும். இதற்கான திட்டம் சமாதானத் தீர்வின் ஓர் இன்றியமையாத பகுதியாக இடம்பெறல் வேண்டும்.

இத்தகைய திட்டம் உணவுப் பாதுகாப்பு, மற்றும் பொதுவான கிராமிய மற்றும் பொருளாதார அபிவிருத்தியின் ஓர் அங்கமாக இடம்பெறுதல் வேண்டும்.

**சிறுபான்மை மக்களின் தேவைகள்**

இதன்பின்னர் தமது அதிகாரப் பகிர்வு அலகினுள் அவர்கள் சிங்கள மற்றும் முஸ்லிம் சிறுபான்மையினரின் தேவைகள் குறித்த நியாயபூர்வமான பிரதிவிளைவைக் காட்டுவார்களென்பதையும் எதிர்பார்க்கலாம். இது சிங்கள, முஸ்லிம் சிறுபான்மையினர் உத்தேச அரசியலமைப்பு மாற்றங்களின் கீழ் அவர்களின் அபிலாஷைகளுக்கு மேலும் சவாலாக விளங்கமாட்டார்களென்பதைப் புரிந்து கொள்வதாலாகும். வலயச் சபைகள் போன்ற மேலதிக அதிகாரப் பகிர்வு அலகுகள் ஒரு நியாயப்பூர்வமான தீர்வாக அமைய முடியும்.

**மேலதிக பிரச்சினைகள்**

இதன் பின்னர் எல்ரீரீஈ அமைப்பும், தெற்கின் பிரதான கட்சிகளும் ஒரு புதிய நம்பிக்கைச் சூழலில் இரு தரப்புகளும் சம்பந்தப்பட்ட, ஏனைய தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வழியேற்படும். தெற்கின் இரண்டு பிரதான கட்சிகளும் மக்கள் விடுதலை முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கும், கூட்டு அமைப்பதற்கும் முயற்சி எடுத்தன என்பதால், எல்ரீரீஈ அமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவதும், கூட்டு அமைப்பதும் அவர்களுக்குக் கஷ்டமான காரியமாக இருக்கப்போவதில்லை. 1971 இல் ஸ்ரீலசுக உள்ளிட்ட ஐக்கிய முன்னணி, மக்கள் விடுதலை முன்னணி அங்கத்தவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கு முயற்சியெடுத்தது. 2001 இல் மக்கள் விடுதலை முன்னணி ஸ்ரீலசுக உள்ளிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு புனர்வாழ்வளிப்பதற்கு முயன்றது. எல்ரீரீஈ அமைப்பும் இந்தப் புனர்வாழ்வளிப்புச் செயல்முறையில் உதவி வழங்குமென்று எதிர்பார்க்கலாம். முஸ்லிம்கள் தமக்குரிய வாழிடங்களில் மீண்டும் குடியேற்றப்பட வேண்டும். உண்மையில் தமிழர் மற்றும் சிங்களவர் உள்ளிட்ட சகல அகதிகளினதும் பிரச்சினை மிக முக்கியமான விடயமாகக் கருதப்படல் வேண்டும். பெருந்தோட்டப் பகுதித் தமிழ் மக்களுக்கான வலயச் சபையொன்று கட்டாயம் ஏற்படுத்தப்படல் வேண்டும். சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகளுக்கான கோட்டா (உரிய பங்கு) முறைமை அவசியமாகும். இளைஞர்களுக்கும், பெண்களுக்குமான விசேட கோட்டா முறைகளும் அவசியம். அமைச்சர்கள் தொகை 40 இலிருந்து 20 ஆகக் குறைக்கப்பட்டது. மாகாண சபைகளின் தொகையையும் எட்டிலிருந்து ஐந்தாகக் குறைக்கப்படலாம். இது ஒவ்வொரு அலகிலும் மூலவள ஒப்புரவையும், அதிகரித்த நிலைதகவையும் உறுதிப்படுத்தும். அம்பாறை தெற்கில் ஊவா மாகாணத்துடன் இணைவதாலும், வனப் பிரதேசங்கள் மத்திய அரசாங்கத்தினால் முகாமைத்துவம் செய்யப்படுவதாலும் வடக்கு - கிழக்கு அலகுக்குச் சொந்தமாகும் நிலப்பரப்பு இலங்கையின் நிலப்பரப்பில் 23% மாகவே அமையும். இது நீதியும், நியாயமும் ஆகும். இதற்குப் பின்னர் தேர்தல்கள், அரசாங்க சேவை, பொலீஸ் நீதிச்சேவை மற்றும் ஊடகங்களுக்கான சுயாதீன ஆணைக்குழுக்கள் சம்பந்தமான கேள்வி உள்ளது. இவ்விடயங்களில் ஏற்கெனவே பெருமளவிலான உடன்பாடு காணப்பட்டுள்ளது.

**பிரிவினை**

மேலுமொரு தவறாக விளங்கிக் கொள்ளப்பட்டுள்ள, முக்கிய விடயத்தை இங்கு குறிப்பிடுதல் வேண்டும். அதிகாரப்பகிர்வு குறித்த வாதத்துக்கெதிராக, மீண்டும் மீண்டும் தெற்கில் நாட்டைப் பிரித்தல் என்ற போலிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகிறது. இந்த நேர்மையற்ற, பொய்யான வாதத்தை வெளிப்படையாக நிராகரிக்குமாறு நாம் தெற்கிலுள்ள 'இராஜதந்திரத் தகைமை' பெற்ற தலைவர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இப்போது இலங்கை அதிகாரப் பரவலாக்கல் பிரித்து விடக்கூடிய ஓர் ஐக்கியப்பட்ட பிரதேசமல்ல. மாறாக, அது அதிகாரப் பரவல் மாத்திரமே மீண்டும் ஐக்கியப்படுத்தக்கூடிய, துயரகரமான முறையில் ஏற்கெனவே பிரிவுற்ற ஒரு நாடாகும். தற்போது நிலவும் பரஸ்பர நம்பிக்கையின்மை நிலையில் சிங்கள மக்கள் எல்ரீரீஈ இயக்கத்தைத் தனித் தமிழ் ஈழத்தை அமைப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரு பயங்கரவாத அமைப்பென்றே எண்ணுகின்றனர். தமிழ் மக்கள் சிங்கள அரசாங்கத்தை அரச பயங்கரவாதத்தை நடைமுறைப்படுத்து வோராகவே நோக்குகின்றனர். இந்த அரசாங்கத்தின் பிரதான நோக்கம் எல்ரீரீஈ அமைப்பை யுத்தத்தில் தோற்கடித்து, தமிழ் மக்கள் அனைவரையும் கொன்றாவது இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாகுமென்று எண்ணுகின்றனர். ஆகவே, ஐக்கியப்படுவதற்கான பாதை சாத்தியமில்லையென்று தோன்றுகிறது. ஆயினும், நாம் பரஸ்பர நம்பிக்கை உள்ள ஒரு நிலைமை எவ்வாறு ஏற்படுத்தப்படலாமென்பதை மேலே காட்டியுள்ளோம். இதனால் நடக்க முடியாத விடயங்கள் நடக்கும்; சாத்தியமற்றது சாத்தியமாகும்.

**அதிகாரப் பகிர்வின் தன்மை**

அதிகாரப் பகிர்வின் தன்மை குறித்து சிறிது விளக்கமளித்தல் அவசியமாகும். இங்கும் பெருமளவிலான தவறான விளக்கம் உள்ளது. ஆங்கிலத்தில் 'அதிகாரப் பகிர்வுக்கு' பதிலாக 'அதிகாரப் பங்கீடு' என்பது கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டு, உத்தேச அரசியலமைப்பின் ஆங்கில வடிவத்திலும் நன்கு இடம்பிடித்துக் கொண்டது. சிங்களத்திலும் அது බලය බෙදා හැරීම என்றில்லாமல் (உத்தேச அரசியலமைப்பில்) බලය පැවරීම மற்றும் බලය බෙදා දීම என்றிருப்பது முழு அரசியலமைப்புச் செயல்முறையையும் மேலும் அர்த்தமுள்ளதாக்கும். அது அதிகாரத்தை வெறுமனே கொடுப்பது என்றில்லாமல், அதிகாரத்தை உண்மையில் பகிர்ந்து கொள்வதாக அமையும். அதிகாரத்தைக் கொடுத்தல் என்னும் கருத்து பிரிவினை என்னும் கருத்தை ஊக்குவிப்பதாகத் தோன்றுகிறது. ஆயினும், அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதென்பது, பிரத்தியட்சமாகவே எவரும் எதிர்ப்புத் தெரிவிக்காத ஆரோக்கியமான செயல்முறையாகத் தோன்றுகிறது. வீட்டிலும், வேலைத் தலத்திலும், கோயில்களிலும், ஆலயங்களிலும், தேவாலயங்களிலும், பள்ளிவாசல்களிலும் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதென்பது சிறந்த உறவுகளுக்கும், ஐக்கியத்துக்கும் வழிநடத்தி, வினைத்திறன் அதிகரிப்பதற்கும் ஆக்கபூர்வமான உற்பத்திக்கும் உதவுகிறது. அப்படியாயின், பரந்த சமூகத்திலும் ஏன் அவ்வாறே அமையக் கூடாது? அது நடைமுறையில் பல பிரச்சினைகளை உருவாக்குமென்பது உண்மையே ஆகும். ஆயினும், இப்பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து, அவற்றுக்குத் தீர்வுகளைத் தேடவேண்டும். இது சிறிய மற்றும் பெரிய தேசங்களில் தமது அடிப்படைத் தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரேயொரு வழியாக இனங்காணப்பட்டுள்ளது. இன்று முழு மனித வர்க்கத்தின் நிகழ்ச்சி நிரலிலும் அதிகாரப் பகிர்வு என்பது இடம் பிடித்துள்ளது.

ஆயினும், நாம் ஒரு சோஷலிஸ புரட்சியின் விழிம்பில் நிற்கிறோம் என்பது இதன் கருத்தல்ல எமக்கு முன்னால் ஒரு 'நீண்ட பயணம்' உள்ளது. அதிகாரப் பகிர்வு செயல் முறை நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு மக்கள் தொடர்ச்சியான விழிப்பு நிலையில் இருத்தல்

வேண்டும். சந்தைப் பொருளாதாரம், நுகர்வோர் சமூகம், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வர்த்தக அமைப்பு ஆகியவற்றின் கட்டமைப்புகள் இன்னமும் இருப்பதோடு, இலங்கையிலும் இவை தொடர்பிலான கட்டமைப்புகள் இன்னமும் உள்ளன. ஆயினும், இலங்கையிலும், உலகிலும் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் பாதிக்கும் அத்திவாரங்கள் உலுக்கப்பட்டுள்ளன. மாற்றியமைத்தல்கள் மற்றும் மாற்றுவழிகளுக்கான தேவைகள் பரந்த அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதிகாரப் பகிர்வு இயக்கமென்பது இருப்புக்கான தேவை மற்றும் சமாதானத்துக்கான தேடல் என்பவற்றின் விளைவாகவே எழுந்துள்ளது. அதிகாரத்திலுள்ளோர் சில அடிப்படை மாற்றங்கள் அவசியம் என்பதைப் புரிந்துகொண்டுள்ளனர். ஆயினும், அதிகாரப் பகிர்வுக்கான திட்டங்களும் பேச்சுவார்த்தைகளும் முழுப் பொருளாதார மற்றும் சமூக அமைப்பினதும் தீவிர மீள் கட்டமைப்புக்கு இட்டுச் செல்வதாகக் கூறமுடியாது. அவை செய்ய முயல்வதெல்லாம் தற்போது நிலவும் சர்வதேச மற்றும் தேசீய பொருளாதார சட்டகத்தினுள் குறிப்பிட்ட அளவு அடிப்படை அதிகாரப் பகிர்வு மற்றும் பரஸ்பர நம்பிக்கையை ஏற்படுத்தக்கூடியசில மாற்றங்களையும், இசைவாக்கங்களையும் ஏற்படுத்துவதும், சமாதானம் ஏற்படும்போது இந்த நிலைமை தனது முறைக்கு மேலும் ஆழமான சமூக, பொருளாதார இலக்குகளை நோக்கிய இயக்கத்தைச் சாத்தியப்படுத்துவதும் ஆகும். **இது மக்களின் ஜனநாயகத் தெரிவு மூலம் ஆதரவு பெறும் கொள்கைகளுக்கு ஏற்ற விதத்தில் அமையும்.**

**தற்போதைய நிலை**

கடந்த இரு மாதங்களில் இலங்கை உயர்மட்டங்களில் மிகவும் தீவிர அரசியல் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது. பிரதான கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் அதிகாரத்துக்காகத் தீவிர ஆக்ரோஷத்துடன் போரிட்டுள்ளனர். இப்பொழுது கடந்த செப்டெம்பரில் பொஜமு - மவிமு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி, 24.09.2001 இல் அரசியலமைப்புக்கான 17வது திருத்தமும் நிறைவேறிய பின்னர் நிலைமை சிறிது ஸ்திரமடைந்திருப்பது போலத்தோன்றுகிறது.

ஆயினும், இது எத்தனை நாள் நீடிக்கும்? இக்கடிதத்தின் ஆரம்பத்தில் குறிப்பிட்ட நியூயோர்க் மீதான தற்கொலைத் தாக்குதல்களின் பாடங்களை நாம் இன்னமும் கற்றுக்கொள்ளவில்லை போலத் தோன்றுகிறது. எமது தலைவர்கள் எல்ரீரீஈ குண்டுதாரிகள் மற்றும் ஏனைய தாக்குதல்கள் குறித்த புள்ளிவிபரங்களை அறிந்தவர்களாகத் தென்படவில்லை. இதன் பின்னர் மக்கள் கேட்கும் துன்பகரமான கேள்விகள் எமது தலைவர்களையும் பாதிப்பதாகத் தெரியவில்லை. ‘நாம் எப்போது கற்றுக்கொள்ளப் போகிறோம்? இன்னும் எத்தனை ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் மரணத்தைத் தழுவவேண்டும்? நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த உலக ஒத்துழைப்பு மன்ற இலங்கைக் குழுவின் அமைப்பாளர்கள் குழு அங்கத்தவர்கள் கொழும்புக்குச் சமீபமாகவுள்ள நுகேகொடையில் செப்டெம்பர் 22ஆம் திகதி சந்தித்தவேளையில், பொலநறுவை எல்லைப் பிரதேசங்களிலுள்ள எமது சமாதான செயற்பாட்டாளர்கள் தமது பிரதேசத்தில் மாத்திரம் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் 23 (யுத்த) மரணவீடுகளுக்குச் சென்றதாகக் கூறினார். அதே தினத்தில் (செப்டெம்பர், 22) கொழும்பின் மத்தியில், விகாரமாதேவி பூங்காவில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவரின் அங்கி கண்டெடுக்கப்பட்டது. இது ஆனந்த குமாரசாமி மாவத்தை வழியாகப் பாராளுமன்றம் செல்லும் எவராவது பாராளுமன்ற அங்கத்தவர் அல்லது வேறு பிரமுகரைக் குறிவைப்பதற்கான, தோல்வியுற்ற ஒரு திட்டமாக இருக்கலாம்.

தற்போதைய உடனடிப் பிரச்சனை என்ன? நிச்சயமாகவே உயர்ந்த முன்னுரிமை கொண்ட உடனடிப் பிரச்சினை யுத்தமும், இனப்பிரச்சினையும் ஆகும். ஆயினும், அதிர்ச்சியூட்டும் வகையில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் 20வது வாசகம் அதிகாரப் பகிர்வு மூலமான இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியை மேலும் ஒரு வருடத்திற்கும் பின் தள்ளிவைத்துள்ளது. இது மனித அவலங்கள் குறித்த அசட்டை மனப்பான்மையை வெளிப்படுத்துகின்றது. இவர்கள் மனிதப் பிறவிகளா? இத்தகைய வெட்கமற்ற, கேவலமான துரோகத்துக்குப் பின்னர் இவர்கள் எப்படி மக்களின் முகங்களில் விழிக்க முடியும்?

## ஜனநாயகத்தின் வெற்றி

ஆயினும், அவர்கள் மக்கள் முன் துணிவாக வந்ததோடு நிற்கவில்லை. ஜேவீபீ அரசியலமைப்புக்கான 17வது திருத்தம் குறித்த (புரிந்துணர்வு உடன்படிக்கையின் தொடரான ஒரு பகுதியென்று குறிப்பிடப்படும்) ஓர் அறிக்கையை விடுத்தது. ஊடகங்கள் அதற்கு 'ஜனநாயகத்துக்குக் கிடைத்த வரலாற்று வெற்றி' என்று மகுடமிட்டன. (டெய்லி நியூஸ், 20.09.2001) ஜேவீபீ தனது அறிக்கையில் பின்வருமாறு கூறியது:

**'இது நாட்டில் உண்மையான பாராளுமன்ற ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அனைத்துச் சக்திகளுக்கும் கிட்டிய வெற்றியாகும்.'**

## ஜனநாயகத்துக்குத் துரோகமிழைத்தல்

இவர்கள் நாட்டில் செயற்படும் ஜனநாயகத்தின் அடிப்படைக் குறைபாடுகளுக்குக கவனம் செலுத்தும் விடயத்தை உதாசீனம் செய்து, ஒரு வருடத்துக்குத் தள்ளிவைத்த பின்னர், இந்த நாட்டில் நீண்ட காலமாக, மோசமான யுத்தமொன்று இடம்பெற்று வருவதற்குக் காரணமாக அமைந்த பிரச்சினையின் தீர்வை ஒத்திவைத்த பின்னர், எவ்வாறு 'உண்மையான பாராளுமன்ற ஜனநாயகம்' ஒன்றைப் பற்றிப் பேச முடியும்?

## அடிப்படையான குறைபாடுகள்

இந்த நாட்டில் ஜனநாயகம் செயற்படுவதில் இரு அம்சங்களில் அடிப்படைக் குறைபாடு உள்ளது. முதலாவதாக, எவ்வளவு தான் வெளிப்படையான ஜனநாயகச் சம்பிரதாயங்கள் இருந்தபோதிலும், சலுகை பெற்ற வர்க்கமொன்று சகல ஜனசமூகங்களையும் சேர்ந்த சலுகையற்ற பரந்துபட்ட வெகுஜனங்கள் மீது ஆதிக்கம் செலுத்தி, அவர்களை நினைத்தவாறு கையாளும் சமூகத்தின் அடிப்படைக் கட்டமைப்புகள் இருப்பதாகும். **ஆகவே, அதிகாரப் பகிர்வு என்பது சிங்கள, தமிழ், முஸ்லிம் ஜனசமூகங்கள் மூன்றையும் சேர்ந்த, சலுகையற்ற வெகுஜனங்களைச் சென்றடையவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதாயின், அது பெரும்பான்மை** மற்றும் சிறுபான்மை ஜனசமூகங்கள் இரண்டுக்குமே அவசியமாகும். இரண்டாவதாக இது சிறுபான்மையினர், அவர்கள் சிறுபான்மையாக இருப்பதன் காரணமாக தொடர்ச்சியாக அனுகூலங்கள் மறுக்கப்படும் நிலையிலிருக்கும் பெரும்பான்மையினரின் ஜனநாயகமாகும். சுதந்திரம் பெற்ற காலந்தொட்டு சிறுபான்மையினங்கள் இதன் விளைவுகளை அனுபவித்து வருகின்றனர். நீதியற்ற சட்டவாக்கங்கள், இனக்கலவரங்கள் மற்றும் ஏனைய பாரபட்ச நடவடிக்கைகள் காரணமாக அவர்கள் அடிக்குமேல் அடி வாங்கி அல்லற்பட்டுள்ளனர். **ஆகவே, சிறுபான்மையின மக்களுக்கு அதிகாரப் பகிர்வென்பது விசேடமாகத் தேவைப்படுகின்றது. இது மேற்கூறியவாறு விசேடமான வழிவகைகளில் அவர்களுக்கு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.**

**சலுகைகள்**

**மக்கள் விடுதலை முன்னணி (ஜேவீபீ) சலுகையற்ற மக்களினதும், நாட்டினதும் உண்மையான நலன்களுக்காகக் கரிசனையைக் காட்டுவது போன்ற பல சலுகைகளை அரசாங்கத்திடமிருந்து பெறுவதில் வெற்றி கண்டுள்ளது என்பதை** நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். அமைச்சுக்களின் தொகைக் குறைப்பு, வாகனங்கள் எண்ணிக்கை குறைப்பு, சுய - விருப்பு அடிப்படையில் வேதனங்களைக் குறைத்துக் கொண்டமை, ஊழல் மற்றும் குற்றச் செயல்களை ஒழிக்கும் முயற்சி, அரசியலமைப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள், விவசாயிகளின் கடன் இரத்து, விலைக்கட்டுப்பாடுகள், யுத்தத்தினால் அல்லற்படுவோரின் வாழ்க்கை நிலைமைகளில் மேம்பாடுகள், கைத்தொழிலதிபர்களுக்கும், வியாபார சமூகத்தினருக்குமான விசேட ஏற்பாடுகள், நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான முயற்சிகள் மற்றும் தேர்தல்களைக் காபந்து அரசாங்கத்தின் கீழ் நடத்துவது என்பவையே இவையாகும். இவையனைத்தும் விவேகமான பேச்சுவார்த்தைகள் மூலம் அடையப்பட்ட மெச்சத்தக்க குறிக்கோள்கள் ஆகும். இது மக்கள் விடுதலை முன்னணிக்கு அடுத்த தேர்தல்களில் மேலும் கூடுதலான வாக்குகளைப் பெற்றுக்கொள்ள உதவக்கூடும். ஆயினும், அவை எவ்வளவு தூரம் திட்டவட்டமான பெறுபேறுகளைக் கொண்டு வரக்கூடியவை என்பது ஒரு கேள்வியாகும். நெற்றியில் துப்பாக்கியை வைத்துப் பிடிப்பது போன்று பாராளுமன்றப் பெரும்பான்மையை இழக்கவேண்டி வருமென்ற அச்சுறுத்தல், வாக்குறுதிகளின் நடைமுறைப்படுத்துதலை நிச்சயப்படுத்துமா? ஓரளவு விளக்கமும், தார்மீக அதிகாரமும் இருக்க வேண்டாமா? இந்தச் செயல்முறைக்கு ஆதரவளிக்கும் அதிகார யதார்த்தம் ஏதாவது உண்டா? எமது சமுதாயக் கட்டமைப்புக்களில் தீவிர மாற்றமின்றி, அதாவது சோஷலிசப் புரட்சியொன்று இல்லாமல், ஒடுக்கப்படும் மக்களுக்குத் திட்டவட்டமான நன்மை எதுவுமே இடம்பெறப் போவதில்லையென்று மக்கள் விடுதலை முன்னணியினர் முன்பு கூறி வந்தனர். சிறு சிறு ஒட்டுப் பொருத்து வேலைகளால் எவ்வித நன்மையும் விளையப்போவதில்லை. அதிகாரத்திலுள்ளோரின் நல்லெண்ணத்தில் பெருமளவுக்குத் தங்கிநின்று, இத்தகைய நொய்தான வாக்குறுதிகளில் அவர்கள் நம்பிக்கை வைத்தது எவ்வாறு என்று கேட்கத் தோன்றுகிறது. சுருங்கக் கூறுவதாயின், புரிந்துணர்வு ஒப்பந்தம் மாத்திரம் (அதிகாரப் பகிர்வுக்கு அவசியமான) உண்மையான, பிரதான அரசியலமைப்பு மாற்றங்களின்றி மக்களின் தீவிர பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்கும் விளக்கத்தையும், தார்மீக அதிகாரத்தையும், தத்துவத்தையும் கொண்டுள்ளதா? ஒருவேளை மக்கள் விடுதலை முன்னணி உண்மையிலேயே எதையும் அதிகமாக எதிர்பார்ப்பது போலத் தெரியவில்லை. அவர்கள் ஏதாவது தோல்விகளுக்காக அரசாங்கத்தைக் குறைகூறி, நல்ல பெயரைத் தாம் எடுத்துக்கொண்டு. தாம் நல்ல விடயங்களைச் செய்ய எத்தனித்தோமென்று கூறி, தேர்தல் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்யலாம். இந்த வேளையில் கிடைக்கும் கால அவகாசத்தைப் பயன்படுத்தித் தமது சக்திகளை மீண்டும் திரட்டிக்கொண்டு தேர்தலொன்றுக்குத் தயாராகக்கூடும்.

**கரிசனை**

மக்கள் விடுதலை முன்னணி இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்த முயற்சியில் மக்களைக் குறித்த கணிசமான கரிசனைக் கவலையைக் கொண்டிருந்ததென்று நாம் நம்புகிறோம். **ஆயினும், நாட்டின் ஒட்டுமொத்தமான மக்களுடையதன்றி, ஒரு பகுதி மக்களை மட்டும் குறித்த கரிசனைக் கவலை, விசேடமாக மக்களின் ஆகப் பலவீனமான பகுதியினராகிய சிறுபான்மை மக்களின் நலன்களை உள்ளடக்காத கரிசனைக் கவலை உண்மையானதென்று எவரும் வலியுறுத்திக் கூறமுடியாது.** இங்கு மேலுமொரு உண்மையைப் பதிவிலிடுதல் வேண்டும். அரசியலமைப்புச் சபையை உருவாக்குவதற்கான விவாதத்தின்போது, மக்கள் விடுதலை முன்னணி மலைநாட்டுத் தமிழர்களையும்

இதில் உள்ளடக்குவதற்கான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரேரணையைக் கோட்பாட்டளவில் எதிர்ப்பதாகத் தெரிவித்தது. ஆயினும், வாக்களிப்பின்போது, பிரச்சினையேற்படுத்துவதில்லையென்றும் கூறியது. (25.09.2001, டெய்லி நியூஸ்) ஆண்டாண்டு காலமாக இந்த நாட்டுக்கு அந்நியச் செலாவணி வருமானத்தை மிக உயர்ந்த அளவில் ஈட்டித் தரும் அதேவேளையில், மிகவும் அதிக அளவில் அடக்கி ஒடுக்கப்படும் ஜனசமூகமாக வாழ்ந்துகொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதித்துவத்திற்கு கோட்பாடு அளவில் மக்கள் விடுதலை முன்னணி எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டிய காரணம் என்ன?

## எதிர்ப்பு

17வது திருத்த விவாதத்தின்போது, தமிழர் விடுதலைக் கூட்டணியும், டெலோ அமைப்பும் இது நாட்டின் மிக முக்கியமான இனப்பிரச்சினைக்கான தீர்வை உதாசீனம் செய்கிறதென்று தெரிவித்து வெளிநடப்புச் செய்தனர். இதே காரணத்துக்காக அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. இதை நாம் புரிந்து கொள்ள முடியும். ஒரு தனி சிங்களப் பாராளுமன்ற உறுப்பினர்கூட இவர்களுடன் சேர்ந்து வெளிநடப்புச் செய்யாதது ஏன்? அமைச்சரவையிலுள்ள ஈபீடீபீ கட்சியும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியும் அரசாங்கத்தோடு சேர்ந்து 17வது அரசியல் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தன. ஐக்கிய தேசியக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் ஆதரவளித்ததால் அது இலகுவாக நிறைவேறியது. இந்த விவாதத்தின்போது இடம்பெற்ற உரைகளில் அரசியலமைப்புச் சபையினதும், சுயாதீன ஆணைக்குழுக்களினதும் பணி குறித்த பெரும் எதிர்பார்ப்பு காணப்பட்டது. ஆகவே, நாமும் இதில் வெற்றிகிட்டுமென்று எதிர்பார்க்கின்றோம். தமிழ் பயங்கரவாதத்தைத் தோற்கடிக்கும் விடயத்திற்கு அரசாங்கம் முதல் முன்னுரிமை வழங்கவில்லையென்று கூறி சிஹல உரமய கட்சி வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை.

## தமிழ் பயங்கரவாதத்தைத் தோற்கடித்தல்

1979 ஜுலை 11ந் திகதி ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவசரகால நிலையைப் பிரகடனம் செய்து தனது மருமகன் பிரகேடியர் வீரதுங்கவுக்குப் பூரண அதிகாரங்களையும், அறிவுறுத்தல்களையும் வழங்கி, வருட முடிவுக்குள் பயங்கரவாதத்தைத் துடைத்தெறியுமாறு கூறி யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்தார். பிரகேடியர் ஒரு பாரிய இயக்கத்தை ஆரம்பித்து முதல் இரவிலேயே 15 பேர் காணாமல் போயினர். இவர்களுள் 7 பேர் படுகொலை செய்யப்பட்டனர். கொலை செய்யப்பட்டவர்களில் இருவரின் மூளைகள் தெருவில் சிதறுண்டு கிடந்தன. போராளிகள் தலைமறைவாகினர். **வருட முடிவிற்குள் பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டும் சகல முயற்சிகளும் தோல்வியடைந்தன. அதன் பின்னர் இடம்பெற்ற சகல முயற்சிகளும் தோல்வி கண்டுள்ளன.** சிஹல உருமயவும், மற்றும் அவர்களைப் போன்றவர்களும் காட்ட முயலுவது போல அது முயற்சியின்மையால் அல்ல. நிதி குறித்த ஆகுசெலவுகள் மற்றும் மனித உயிர்கள், சொத்துக்கள் குறித்த ஆகுசெலவுகள் மேலே விளக்கப்பட்டுள்ளன. இலங்கை இத்தகைய ஆகுசெலவுகளைச் சமாளிக்கக்கூடிய நிலையில் இல்லை. இதனால், பயங்கரவாதத்தைத் தோல்வியுறச் செய்யும்சகல நடவடிக்கைகளும் கைவிடப்படவேண்டுமென்று அர்த்தமல்ல. **சகல நாடுகளும், அரசுகளும், தனி நபர்களும் தற்பாதுகாப்புக்கான உரிமையையும், கடமையையும் கொண்டுள்ளனர். இது சுய - பாதுகாப்புக்காகத் தாக்குதல் நடத்தும் உரிமையையும் உள்ளடக்குகின்றது. ஆயினும், இது சட்டப் பிரகாரம் இடம்பெறுதல் வேண்டும். சட்டத்திற்கு அப்பால் செல்வது தவறானது என்பதோடு, அது எதிர்பார்த்ததற்கு நேரெதிர் விளைவுகளையே ஏற்படுத்தும்.** மேலும், இந்த விடயத்தைப் பொறுத்தவரையில், இந்தக் கடிதம் முழுவதிலும் காணப்படும் கருத்துக்களுக்குக் கவனம்செலுத்தப்பட வேண்டுமென்பதே எமது நிலைப்பாடு ஆகும். நாம் போராடும் இயல்பு என்ற பதத்தையே

பாவித்துள்ளோம். ஏனெனில், 'பயங்கரவாதம்' என்பது ஆதிக்க வர்க்கம் / நிறுவனங்கள் / அரசின் நிகழ்வு நிலைப் பயங்கரவாதமாக (முதல் நிலைப் பயங்கரவாதம்) இருக்கலாம் அல்லது அடக்கியொடுக்கப்பட்ட வர்க்கத்து மக்களின் 'இரண்டாம் நிலைப் பயங்கரவாதமாக' இருக்கலாம். மேலும், சிஹல உரமய மற்றும் பயங்கரவாதத்துக்கெதிரான தேசிய இயக்கம் போன்றவை அவற்றை எதிர்ப்பவர்கள் மீது அடிக்கடி பயங்கரவாத வழிமுறைகளைப் பிரயோகிக்கின்றன. இத்தகைய அமைப்புக்கள் உண்மையில் அதிகாரம் கொண்டோரின் / ஆட்சி நிறுவனத்தின் / நிகழ்வுநிலையின் பணியாளர்களும், பாதுகாவலர்களும் ஆவர். ஆகவே, இவர்கள் தாம் அடக்கியொடுக்கப்படுகிறோமென்பது எவ்வளவு தான் கூக்குரலிட்டபோதிலும், இவர்களும் முதலாம் நிலைப் பயங்கரவாதிகளேயாவர்.

## உடனடித்தேவை - செய்யவேண்டியது என்ன?

உலக, மற்றும் எமது சொந்த நாட்டு விவகாரங்களின் அனுபவம், உடனடித் தேவை என்னவென்பது குறித்தும், நாம் என்ன செய்ய வேண்டுமென்பது குறித்தும் முடிவு செய்வதற்கு உதவிக்கரமாக உள்ளது. இதற்கு முதல்படியாக சமாதானத்துக்கு விரோதமான சக்திகளின் பலம் குறித்து நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

**நாம் ஒருவரையொருவர் அழித்துக்கொள்ளுவதைக் தவிர்க்கவேண்டுமெனில், எம் மத்தியில் அதிகரித்து வரும் வன்செயல் மற்றும் எதிர்வன்செயல் என்பவற்றை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். இதைச் செய்வதாயின், மேலே குறிப்பிட்ட வழிகளிலான ஒரு நீதியான தீர்வு அவசியம். இத்தீர்வு தெற்கின் மக்களின் கருத்தொருமிப்போடு வடக்கோடு இடம்பெறும் பேச்சுவார்த்தைகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.** சமாதானச் செயற்பாட்டாளர்கள் சளைக்காது, இடைவிடாது பணியாற்ற வேண்டும். அவர்கள் வெகுஜனங்களோடு சேர்ந்து புரிந்துணர்வை அபிவிருத்தி செய்து, இந்த அடிப்படையில் தலைவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். அடிமட்டங்களிலான வெகுஜனங்களும் அவர்களின் தலைவர்களும் விடயங்கள் பொறுமையாகவும், நியாயபூர்வமாகவும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தப்படும்போது அவற்றை ஏற்றுக்கொண்டு செயற்படுவரென்பது நாடு பூராவும், எண்ணிறந்த சந்தர்ப்பங்களில் நாம் நேரடியாகப் பெற்றுக்கொண்ட அனுபவமாகும்.

## எதிர்பாராத தடை

ஆயினும், மேலே குறிப்பிட்டவாறு அதிகாரப் பகிர்வு மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தை மேலும் ஒரு வருடத்துக்குத் தள்ளிப்போடும் அரசாங்கத்துக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 20 ஆம் வாசகம் தடையாக அமைந்துள்ளது. இத்தகைய ஒரு நிலைமை எழுந்தது துரதிருஷ்டவசமானதாகும். ஆயினும், இதுகுறித்துப் பாராளுமன்றத்தினுள்ளோ அல்லது அதற்கு வெளியிலோ எவரும் மூச்சு விடாதிருப்பது அதைவிடத் துரதிருஷ்டவசமான, திடுக்கிட வைக்கும் நிலைமையாகும். இது மக்களின் உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடு அல்ல. **இதற்கு ஒரு காரணம் ஊடகங்கள் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைக் காலின்கீழ் போட்டு மிதிப்பதாகும்.** ஓர் அமைப்பென்ற வகையில் எமக்கு மீண்டும் மீண்டும் ஊடகங்களில் 'எமது கருத்தைத் தெரிவிக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளது. 1995 இல் நாம் எமது நூல்களை 'உன்னதமான எட்டு வழிப்பாதை', 'சமாதானத்துக்கான எட்டு முன் தேவைகள்', 'சமாதானம் குறித்த ஒரு நிரூபம் - அரசியலமைப்புக்கான சீர்திருத்தம்' - மீள்பார்வைக்கும், திறனாய்வுக்குமென ஒரு பிரபல பத்திரிகை ஆசிரியரிடம் கொண்டு சென்றபோது, அவர் தனது முதலாளி வடக்கு - கிழக்கு இணைப்பு அல்லது பிரிவு குறித்துப் பிரஸ்தாபிக்கும் எந்த விடயத்தையும் தனது பத்திரிகையில்

பிரசுரிக்கக்கூடாதென்று தடை விதித்திருப்பதாகத் தெரிவித்தார். **இதுவா ஜனநாயகம்? இல்லை. இது யதார்த்தத்தைப் பேணுகிற பலனும் பிரதிபலனுமாகும். கீழ்த்தரமான, ஈவிரக்கமற்ற சக்திப் பிரயோகம்! ஆயினும், ஊடகங்கள் மாத்திரமன்று. சகல மட்டங்களிலுமான பல பாராளுமன்ற அங்கத்தவர்களும் அதிகாரப் போட்டி, வெட்கமற்ற முறையில் தமது வசதிகள், அனுகூலங்கள் பாரிய வேதனங்கள், வாகனங்கள், மற்றும் தரகுக்கூலிகளுக்காக விலை போகக்கூடியவர்களாகவே உள்ளனர்.**

## எழுந்து நின்று உங்களை இனங்காட்டுதல்

ஆயினும், சகல பாராளுமன்ற அங்கத்தவர்களும், சகல ஊடகங்களும் இத்தகையவர்களென்று நாம் எண்ணவில்லை. மானமுள்ளோர், சுயபுத்தியுள்ளோர், மக்களின் உணர்வுகளுக்குச் சிறிதளவாவது மதிப்புக் **கொடுப்போர் சிலர் இன்னமும்** எஞ்சியுள்ளனரென்று நாம் திடமாக நம்புகிறோம். இது உண்மையெனில், மக்களின் நாமத்தில் நாம் உங்களை வேண்டிக்கொள்கிறோம். 'எழுந்து நின்று உங்களை இனங்காட்டுங்கள்'. அடுத்த தற்கொலைக் குண்டுதாரியை எண்ணிப் பாருங்கள். அடுத்தடுத்து நிகழவிருக்கும் தாக்குதல்களை எண்ணிப்பாருங்கள். மனிதப் படுகொலைகளுக்கும், நிரபராதி மக்களின் துயரங்களுக்கும் **நீங்களே** பொறுப்பாவீர்கள். நீதியினதும், சமாதானத்தினதும் மிகவும் அடிப்படைக் கோரிக்கைகளை மனதிற் கொள்ளுங்கள். உங்கள் கண்களையும், செவிகளையும் திறந்து மக்களின் துயரங்களைப் பாருங்கள். அவர்களின் குரலைக் கேளுங்கள். உங்கள் இதயத்தை அவர்கள்பால் செலுத்துங்கள். **உங்கள் குரல்களை உயர்த்தி முதலில் புரிந்துணர்வு உடன்படிக்கையிலுள்ள மோசமான, கேவலமான 20வது வாசகத்தை அகற்றுமாறு அரசாங்கத்திடமும், மக்கள் விடுதலை முன்னணியிடமும் கோரிக்கை விடுங்கள். அதன் பின்னர் உடனடியாகச் சமாதானத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்***

மக்களின் மதச்சார்புள்ள, மதச்சார்பற்ற சகல அமைப்புக்களும், அவற்றின் தலைவர்களும் (அவர்களுட் சிலராவது) பகிரங்கமாக வெளிவந்து இதே கோரிக்கையை விடுத்தல் வேண்டும்.

## அதிகாரப் பகிர்வின் விரோதிகள்

அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் சிஹல உருமய மற்றும் பயங்கரவாத எதிர்ப்புத் தேசிய இயக்கம் போன்ற குழுக்களும், கட்சிகளும் உள்ளன. அவர்கள் அதிகாரப் பகிர்வு நாட்டைப் பிரிப்பதங்கு இட்டுச் செல்லுமென்று கூறுகின்றனர். புரிந்துணர்வு உடன்படிக்கையில் 20ஆம் வாசகத்தை வலியுறுத்தியதிலிருந்தும், தோட்டப்பகுதியின் தமிழ்மக்களுக்கு அரசியலமைப்புச் சபையில் இடம் ஒதுக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததிலிருந்தும் மக்கள் விடுதலை முன்னணியும் அதிகாரப் பகிர்வை எதிர்ப்பது தெளிவாகும். இவர்கள் பாராளுமன்ற ஜனநாயகத்துக்கு ஆதரவென்று கூறியபோதிலும் 1987 - 1989 காலப்பகுதியில் அதிகாரப் பகிர்வு யோசனைகளை எதிர்த்து பயங்கரவாத சகாப்தத்தை உருவாக்கி, இரத்தக்களரியை ஏற்படுத்திய தமது நிலைப்பாட்டிலிருந்து சிறிதளவுகூட முன்னேறவில்லை. இன்று அவர்கள் சிஹல உருமய போன்ற கட்சிகளுக்குக் கிடைக்கும் அதே வாக்குகளுக்கும் போட்டியிடுகின்றனர். **இந்த இரு கட்சிகளும் உண்மையில் இனவாதக் கட்சிகளாகும். இவர்கள் தமிழ் மக்களுக்குரிய ஜனநாயக ரீதியான பங்கை மறுப்பவர்களாயின், இவர்கள் ஜனநாயகத்துக்கு ஆதரவளிப்பவர்களாக இருக்க முடியாது.**

---

*குறிப்பு- இதை எழுதிய பின்னர், இது அச்சில் இருந்த வேளையில் எல்ரீரீஈ அமைப்புடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் சாத்தியம் குறித்து ஐதேக வுடனும், மவிமு யுடனும் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்துவதாகத் தகவல் கிடைத்துள்ளது. ஆயினும், இது எவ்வளவு பாரதூரமானதென்று இனிமேல் தான் தெரியவரும்.

எமது நாடு அதிகாரப் பகிர்வு நடவடிக்கைகளால் பிளவுபடும் அபாயம் இல்லை, அது ஏலவே பிளவுபட்டுள்ளது, அதிகாரப் பகிர்வு மாத்திரமே அதைக் காப்பாற்ற முடியுமென்பதை மேலே நாம் நன்கு விளக்கியுள்ளோம். **அதிகாரப் பகிர்வை எதிர்ப்பவர்கள் காரணமாகவே நாம் துயரமான முறையில் பிளவுபட்ட ஒரு தேசமாக மாறியுள்ளோமென்பதையும், இவர்கள் காரணமாகவே நாம் தொடர்ந்தும் துயரமான முறையில் பிளவுபட்ட தேசமாக உள்ளோமென்பதையும் நாம் தெளிவாகச் சுட்டிக்காட்டுதல் வேண்டும். இவர்கள் காரணத்தாலேயே நாம் தொடர்ந்தும் தேவையற்ற துயரங்களையும், வேதனைகளையும் அனுபவிக்க வேண்டியுள்ளது. சிங்கள, பௌத்த பாரம்பரியங்களைப் பாதுகாக்கப் போராடுவதாகக் கூறும் இந்த நபர்களின் தனிப்பட்ட வாழ்க்கைகளும், செயற்பாடுகளும் சிங்கள, பௌத்த தர்மக் கோட்பாடுகள் அனைத்துக்கும் நேர்விரோதமானவையென்பதை மக்களுக்கு, விசேடமாக இளைஞர்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும். மக்கள் இவர்களை இனங்கண்டு கொள்ளவேண்டும். இவர்களை அம்பலப்படுத்த வேண்டும். இலங்கையை நாசத்தின் விளிம்புக்குக் கொண்டுவந்துள்ள இவர்களின் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் கைவிடுமாறு வலியுறுத்தவேண்டும்.**

## பங்குடைமையும், மூலவளங்களைப் பகிர்ந்துகொள்வதும்

எமது நாட்டில் நீதியும், சமாதானமும் ஓங்குவதற்கான போராட்டத்தில் ஒவ்வொரு ஏற்றுக்கொள்ளப்பட்ட மதத்தையும், தத்துவார்த்தத்தையும் சேர்ந்த சகல நியாய உணர்வுள்ள, மிதவாத மக்களும், தலைவர்களும் ஒருங்கிணைதல் வேண்டும். உதாரணமாக சிங்கள ஆணைக்குழு போன்ற அமைப்புகள் இலங்கையின் அனேகமான பிரச்சினைகளுக்கு கிறிஸ்தவ திருச்சபையும், அரச சார்பற்ற நிறுவனங்களுமே காரணமென்று கூறுவதைக் கைவிடவேண்டும். ஆயினும், பேராசிரியர் கணநாத் ஒபேசேகர தமக்கே உரிய சிறப்பான பாணியில் இவர்களின் வாதங்களின் ஓட்டைகளையும், பௌத்த மத எண்ணக்கரு மற்றும் வரலாறு சம்மந்தமான விளக்கங்களில் உள்ள தவறுகளையும் அம்பலப்படுத்தியுள்ளாளர். **பௌத்த மதத்தைப் பின்பற்றும் இவர் இந்த நாட்டின் பௌத்த தலைவர்கள் தம்மைச் சுற்றிக் காணப்படும் சகல தீமைகளுக்குமான மூலகாரணத்தை அறிந்து கொள்ள விரும்பினால், தமது சொந்த இதயங்களிலும், மனங்களிலும், தமது சொந்த வாழ்க்கையிலும், முதலில் தேடுதல் நடத்தவேண்டுமென்று கூறுகின்றனர்.** பௌத்தமதம், அன்பு, அடக்கம் மற்றும் உண்மை என்ற பரந்த உணர்வில் நீதிக்கும் சமாதானத்துக்குமான போராட்டத்தையே வலியுறுத்துகிறது என்றும் அது மற்றவர்களைக் கண்டித்து ஒதுக்குவது, குறுகிய திருப்தி மற்றும் தான் செய்வதெல்லாம் சரியென்ற மனப்பாங்குகளை ஏற்கவில்லையென்றும் அவர் மேலும் தெரிவிக்கின்றார். நாட்டின் பெரும்பான்மையினரான பௌத்த மக்கள் ஏனைய சகல மதங்களையும் சேர்ந்த மக்களோடு எப்போதும் உரையாடி, சமாதானமாக வாழவே தயாராகவிருந்துள்ளனர். எமது நாட்டின் நீண்டகால வரலாற்றில் இதற்கான பல உதாரணங்கள் உள்ளன. இன்னும் பௌத்த மக்களும், அடிமட்டங்களிலுள்ள அவர்களின் மதத் தலைவர்களும் (பிக்குகள், பிக்குணிமார்), மதக் கலப்பற்ற ஏனைய தலைவர்களும் ஏனைய ஏற்றுக்கொள்ளப்பட்ட மதங்கள் மற்றும் பழைய, நவீன தத்துவார்த்தங்களைச் சேர்ந்த மக்களோடு உரையாடி, சமாதானமாக வாழவே விரும்புகின்றனர். இது, ஏற்கெனவே கணிசமான அளவுக்கு எமது சமூகத்தின் சாதாரண வாழ்விலும், செயற்பாட்டிலும் காணக்கிடக்கும் ஒரு நிகழ்வுண்மையாகும்.

**நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து எமது சமூகத்தை ஆழமாகப் பகுப்பாய்வு செய்து எம்மைச் சுற்றியுள்ள தீமைகளின் மூல காரணங்களையும், அவற்றின் பின்னாலுள்ள சக்திகளையும் புரிந்துகொண்டு, எமது ஆன்மீக மற்றும் பொருளாதார மூலவளங்களையும் பகிர்ந்துகொண்டு நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளுக்காகப் பணியாற்றுதல் வேண்டும்.** நாம் வாழும் இந்த

அகிலமயப்பட்ட சமூகத்தின் சாதகமான மற்றும் பாதகமான சக்திகளையும், அவை எமது சமூகத்திலுள்ள சகல மதங்களையும் சேர்ந்த மக்கள் மீது எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றனவென்பதையும் புரிந்துகொள்ளுதல் வேண்டும்.

உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், உலக வர்த்தக அமைப்பு மற்றும் இயைபுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.உலக வங்கித் தலைவர் ஜேம்ஸ் டி வொல்பென்சோன் 1998 இல் நிகழ்த்திய வருடாந்த உரையில் உலக முறைமையின் பாரதூரமான குறைபாடுகள் மற்றும் ஏழைகளின் சுமை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'நிதித் திட்டங்கள் மாத்திரம் போதாது. நாடுகள் தமது பொருளாதாரங்களைச் சீர்ப்படுத்துவதற்குத் துன்பகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நாம் அரசாங்கங்களுக்குக் கூறும்போது, அது பெரும் பதட்டங்களுக்கு இட்டுச் செல்லுமென்பதை நாம் அறிந்துள்ளோம். அரசாங்கங்கள் என்றி, மக்களே இந்த வேதனைகளை உணருகின்றனர்.'

ஆகவே, அவர் அவசரமான சீராக்கல்கள் குறித்த தேவையை ஏற்றுக்கொண்டதோடு, புதிய அணுகுமுறைகளும் அவசியமென்று தெரிவித்தார்.

'எமது நடைமுறையிலுள்ள நிதிப்பட்டியல்களை நாம் மீள் கட்டமைப்புச் செய்து வருவதோடு, ஏழை ஜனசமூகங்களை விரைவில் சென்றடையக்கூடிய முன்னுரிமை நிகழ்ச்சித் திட்டங்கள் மீது கூடிய கவனம் செலுத்தப்படுவதை உறுதி செய்யவும் விரும்புகிறோம்.

'உலக வங்கி அபிவிருத்தி அறிக்கை 2000/2001 'அனைத்துமடங்கும் பார்வை' இறுதிப்பகுதியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

'வறுமைக்கு எதிரான போராட்டத்தில் பிரதான செயற்பாட்டாளர்கள் ஏழை மக்களேயாவர். வறுமை - எதிர்ப்பு உத்திகளை வடிவமைப்பதிலும், நடைமுறைப்படுத்துவதிலும், கண்காணிப்பதிலும் அவர்களுக்கே முதலிடம் வழங்கப்படுதல் வேண்டும். அத்துடன் வறுமைக்கு எதிரான போராட்டத்தில் அரச நிறுவனங்களுக்கும் அப்பால் சென்று மக்களின் நிறுவனங்களை அணிதிரட்டிச் செயற்படவேண்டிய அவசியத்தையும் உலக வங்கி ஏற்றுக்கொண்டுள்ளது. இப்பணியில் உலகின் மதங்களின் மூலவளங்களைத் திரட்டிப் பிரயோகிப்பது குறித்து அது கவனஞ் செலுத்தியுள்ளது. இவ்வாறாகவே 1998 பெப்ருவரியில் லண்டன் லாம்பெத் அரண்மனையில் உலக மதங்களின் அபிவிருத்தி உரையாடல் (டபிள்யூ எப் டீ டீ) தாபிக்கப்பட்டது. கண்டர்பரி ஆர்ச் பிஷப் அதி வண. கலாநிதி ஜோர்ஜ் கேரீ அவர்களும் உலக வங்கித் தலைவர் திரு. ஜேம்ஸ் டி வொல் பென்சோனும் இந்த அமைப்பின் இணைக் காப்பாளர்களாக விளங்குகின்றனர். இதில் உலகின் மதங்கள் அனைத்தும் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளன. இந்தப் புதிய அமைப்பு அதி உயர் மட்டத்தில் அபிவிருத்தியில் உலக மதங்களின் பாத்திரம் குறித்த உரையாடலை ஆரம்பித்தது. 'உலக ஒத்துழைப்பு மன்ற இலங்கைப் பிரிவின் கூட்டிணைப்பாளராகிய வண. யொஹான் தேவானந்த 1999 அக்டோபரில் இந்தியாவில் சென்னையில் நடந்த உலக மதங்களின் அபிவிருத்தி உரையாடல் பிராந்திய மாநாட்டில் இந்த அமைப்பை பிரதிநிதித்துவம் செய்தார். எட்டு மதங்களின் தலைவர்கள் இங்கு ஒன்றுகூடி, வறுமைக்கெதிரான போராட்டத்துக்கு விசேட வலியுறுத்தல் வழங்கி, அபிவிருத்தியில் பல்வேறு மதங்களின் பாத்திரம் குறித்த உரையாடலொன்றை நடத்தினர்.

உலக அரச சார்பற்ற நிறுவனங்களின் பணியின் அளவெல்லை குறித்து இங்கு பிரஸ்தாபிப்பது நன்மை பயப்பதாகும். 1995 ஆம் ஆண்டின் அகில ரீதியான ஆட்சிச் செயல்முறை குறித்த ஐ.நா. அறிக்கையொன்று சர்வதேச ரீதியில் சுமார் 29,000 அரச சார்பற்ற நிறுவனங்கள் இருப்பதாகத் தெரிவித்தது. எமது நாட்டிலும் அ.சா.நி.களின் எண்ணிக்கை துரிதமாக வளர்ச்சியுற்றுள்ளது. அமெரிக்காவில் மட்டும் 2 மில்லியன் அ.சா.நி.கள் உள்ளன. அ.சா.நி.கள், உலக வங்கியைவிடக் கூடுதலான பணத்தைக் கைதவிர்ப்புச் செய்வதாக செஞ்சிலுவைச் சங்கம் கணிப்பீடு செய்துள்ளது. (டெய்லி நியூஸ், 28,29 பெப்ருவரி 2001)

ஆகவே, உலகளாவிய ரீதியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் முக்கியமான பணியை ஆற்றுகின்றன என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பல்வேறு விதமான அ.சா.நி.கள் உண்டு என்பதும், அவற்றுள் நல்லவை, மோசமானவை, அசமந்தப் போக்குள்ளவை இருப்பதும், எண்ணிறந்த பல்வேறு நடவடிக்கைகளில் அவை ஈடுபட்டிருப்பதும் உண்மையாகும். தீவிரவாத சிங்கள அமைப்புகள் கூறுவதுபோல அவற்றை ஒட்டுமொத்தமாக சிங்கள - எதிர்ப்பு, தமிழ் - சார்பு மற்றும் ஈழம் - சார்பு, பணம் சம்பாதிக்கும் அல்லது வெளிநாட்டு நிதிவழங்கல் மூலம் கட்டுப்படுத்தப்படும் அமைப்புக்களென்று கூறிவிடமுடியாது. அபிவிருத்தி மற்றும் சமாதானத் துறைகளில் பொறுப்புணர்வு மற்றும் வகைப் பொறுப்புடன் (கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கைகளைச் சமர்ப்பிப்போர்) சுயாதீன மதிப்பீடுகளுக்கு உட்பட்டு சமூகத்தில் பெறுமதிமிக்க பாத்திரங்களை வகிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் உள்ளன. அரசாங்கமும் இந்த உண்மையை ஏற்றுக்கொண்டுள்ளது. 30.03.2000 அன்று ஐநா சபையில் இலங்கையின் நிரந்தர பிரதிநிதி எச்.எம்.ஜீ.பீ பலிஹகார ஜெனிவாவில் இடம் பெற்ற ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாக உரையாற்றுகையில் பல தடவைகள் இலங்கையின் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு துறைகளில் ஆற்றி வரும் பெறுமதி மிக்க பணிகளைப் பற்றி எடுத்துரைத்தார். உதாரணமாக:

> 'மிகவும் கஷ்டமான சூழ்நிலைகளில் மனித உரிமைகளை முன்னேற்றுவதற்கும், பாதுகாப்பதற்குமான அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு அரசு சார்பற்ற நிறுவனங்களும் வழங்கியுள்ள பங்களிப்பை எனது அரசாங்கம் பெரிதும் மதிக்கிறது' (டெய்லி நியூஸ் அறிக்கை - 03.04.2000)

அரசு சார்பற்ற நிறுவனங்களில் பல்வேறு அளவுகளில் ஊழல்களும் உண்டு என்பதும் உண்மையாகும். இது மிகவும் பாரதூரமான ஒரு விடயமாகும். ஆயினும், தேசத்தின் வாழ்வில் இன்று ஒவ்வொரு துறையிலும் ஊழல் உண்டு என்பதையும், அது அரச சார்பற்ற நிறுவனங்களில் மாத்திரமில்லையென்பதையும் நாம் நினைவிற் கொள்ளுதல் வேண்டும். ஊழல் ஒரு சர்வதேச புலன் நிகழ்வாகும். சகலருக்கும் ஒட்டு மொத்தமாகச் சேறு பூசுவது தீர்வாகமாட்டாது. குறித்துரைத்த படுமோசமான நிகழ்வுகளை அம்பலப்படுத்தி நீதிமன்றங்களில் நிவாரணம் தேடலாம்.

கிறிஸ்தவ திருச்சபையைப் பொறுத்த வரையிலும் ஆக்க பூர்வமான அம்சங்களும் தீங்கு விளைவிக்கும் விடயங்களும் உண்டு. ஏகாதிபத்தியவாத சகாப்தத்தில் 'மேற்கத்தைய கலாச்சாரம் என்று அழைக்கப்பட்டது. சுதேச மதம் மற்றும் கலாச்சாரம் என்பவற்றின் மீது தீவிர, பிரதிகூலத் தாக்கங்களை ஏற்படுத்தி உண்மையான சுதேச விழுமியங்களையும் பாரதூரமாகச் சீரழித்தது. அதேநேரத்தில், அது கைத்தொழில் மயம் மற்றும் நவீனவாழ்க்கைமுறை, ஜனநாயகம், குடியியல், மற்றும் மனித உரிமைகள், பெண்கள் உரிமை இயக்கங்கள் போன்ற அனுகூலங்களையும் கொணர்ந்தது.

ஆயினும் சுதந்திரத்திற்குப் பிந்திய காலகட்டத்தில் (1948) பொதுவாகக் கிறிஸ்தவ திருச்சபைகள் சுதேச சமூகத்தோடு ஒரு புதிய உறவை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டன. ஒழுக்க நெறிகளுக்கு விரோதமான மதமாற்றத்தை அவை பரந்த அளவில் தவறானவை என்பதை ஏற்றுக்கொண்டதோடு, அநேக திருச்சபைகள் அவற்றைக் கண்டிக்கவும் செய்தன. ஆயினும், இங்கும் வலியுறுத்தல் வேறுபாடுகள் உள்ளன. சில திருச்சபைகளில் பிற்போக்குத் தன்மை கொண்ட 'அடிப்படைவாதம்' மிகவும் பிரதிகூலமான ஓர் அம்சமாக இன்னமும் எஞ்சியுள்ளது. சகல மதங்களிலும் 'அடிப்படைவாதம்' என்பது ஒரு புலன் நிகழ்வாக உள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

உண்மையில் சகல மதங்களுக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் சில விடயங்கள் உள்ளன. இங்கு தான் நாம் விடயத்தின் செறிந்த சாராம்சத்திற்கு வருகிறோம். இன்று நாம் எதிர்நோக்கும் பிரதான அச்சுறுத்தல், மதங்களுக்கும், தத்துவார்த்தங்களுக்குமிடையிலான பரஸ்பர விரோதச் செயல் பாடுகள் அல்ல. இன்று ஊறிப்பரவும் இயல்பு கொண்ட 'மதம்' ஆகிய நுகர்வுவாதமும் அதன்

ஆதிக்கமும் சகல மதங்களையும், தத்துவங்களையும் அச்சுறுத்தி அவற்றின் ஆன்மாவைத் தனது நச்சுத்தன்மை கொண்ட கலாச்சார ஆக்கிரமிப்போடு கூடிய ஏவல்கள் மற்றும் விழுமியங்களால் சீரழித்துள்ளது. என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். போர் ஆயுதத் தளவாடக் கைத்தொழில் இராணுவ மயமாக்கல், உலக வங்கி, சர்வதேச நாணைய நிதியம், கடன் சுமைகள், போதைப் பொருட்கள், உல்லாசப் பிரயாணம், சூழல் சீரழிவு போன்றவை உலகின் பரந்துபட்ட பகுதிகளிலும், மக்கற் கூட்டத்தினரிடையிலும் ஆதிக்கம் செலுத்துவதால் ஒடுக்குவோரும், ஒடுக்கப்படுவோருமான இருசாராரினதும் மனிதத்தன்மை மட்டுப்பாடு, அந்நியப்படுத்தல் மற்றும் திரிபுகளுக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இன்றைய இலங்கையில் சகல மதங்களையும் தத்துவார்த்தங்களையும் சேர்ந்த மக்கள் உண்மையில் மதமாற்றம் செய்யப்படுவது இந்தச் சக்தி மிக்க நுகர்வு வாதத்துக்காகும். இந்தச் செயல் முறையில் பாரம்பரிய கலாச்சாரமும், விழுமியங்களிலும் பாரதூரமான முறையில் சீரழிவுறுகின்றன. ஆகவே, இந்த நிலைமைளைப் புரிந்து கொள்ளும் சகல மதங்களையும், தத்துவார்த்தங்களையும் சேர்ந்த மக்கள் ஒன்றுபட்டு, குழுவாதத்தடைகளை உடைத்து, தமது மனங்களினதும், ஆன்மாவினதும் மூலவளங்களை ஒன்று திரட்டிப் பகிர்ந்து கொண்டு இன்றுள்ள சமுதாயத்தில் நிலவும் தீய சக்திகளை எதிர்த்துப் போராட வேண்டும். சகல மக்கள் சக்திகளும் தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் நீதி, சமாதானம் மற்றும் மனித அபிவிருத்திக்கான ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

**நடைமுறை நோக்கில்**

இறுதியாக, மீண்டும் 'நாம் என்ன செய்ய வேண்டும்?' என்ற கேள்வியை எழுப்புதல் வேண்டும். இது இலங்கை எங்குமுள்ள மக்களாலும், அமைப்புகளாலும் மிகவும் நடைமுறைச் சாத்தியமான வழிகளில் எதிர்கொள்ளப்படுதல் வேண்டும். இவையனைத்தையும் ஒரே நாளில் சாதித்துவிட முடியுமென்று நாம் கூறவில்லை. இச்செயல்முறை சிறிது காலமாக இடம்பெற்று வருகின்றது. இது மேலும் தொடர்ந்து பரவுதல் வேண்டும். பல சமாதான அமைப்புகள் / மனித் உரிமை அமைப்புக்கள் / அரச சார்பற்ற நிறுவனங்கள் துணிச்சலாக முன்வந்து பலவருடகாலமாக, பல்வேறு பிரிவினரான மக்களின் சமாதானத்துக்காகக் குரல் கொடுக்க வைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. சமீபத்தில் வியாபாரச் சமூகம் இதைச் செய்யும் ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியில் இறங்கியது. இத்தகைய மற்றும் மேலும் அதிகரித்த முயற்சிகள் சளைக்காத திடசங்கற்பத்தோடு முன்னெடுக்கப்படுதல் வேண்டும். இந்தச் சவாலைச் சாதாரண மக்களின் நாமத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஊடகவியலாளர் முன்வைப்பதற்கு நாம் முயற்சியெடுத்தோம். 'மேல்' மட்டத்திலும் 'கீழ்' மட்டத்திலுமுள்ள பல பொதுநிலையாளர்கள் அரசியல்வாதிகளையும், சில நேரங்களில் ஊடகங்களையும் குற்றம் சொல்லும் இலகுவான வழியைத் தெரிந்தெடுத்து, தாம் இது குறித்து எதுவுமே செய்யாது வாளாவிருக்கின்றனர். சமாதானத்தைக் கொணர்வதற்கும், பொறுப்புவாய்ந்த மேலும் பல்வேறு மட்டங்களில் அதிகாரம் கொண்ட பல ஆன்மீக மற்றும் மதஞ்சார மக்கள் முன்னணியில் இந்தச் சவால் வைக்கப்படவேண்டுமென்று நாம் எண்ணுகிறோம். ஏற்கனவே 'நாம் எப்போது கற்றுக்கொள்ளப்போகிறோம்? என்னும் தலைப்பின்கீழான கலந்துரையாடலில் இவர்கள் யார் என்பதை நாம் தெளிவாகக் கூறியுள்ளோம்.

அவர்கள் யாரென்பதை இங்கு கூறுவது பொருத்தமாகும். நாம் பொறுப்புள்ளவர்களென்று கருதுவோர் : மத, கலாச்சார தலைவர்கள் புத்திஜீவிகள், உயர்வாழ்க்கைத் தொழில் வல்லுநர்கள், வியாபார சமூகம், தொழிற்சங்கங்கள் கமக்காரர்கள், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் ஊடகங்கள். இந்தச் சவாலை நாம் மீண்டும் இவர்களுக்கு நினைவூட்டுகிறோம். **'எழுந்து நின்று, உங்களை இனங்காட்டுங்கள்!** அடுத்த தற்கொலைக்குண்டுதாரி, அவருக்கு அடுத்தவர், மேலும் அடுத்தவரைப் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்........ மனிதப் படுகொலைகளுக்கும், நிரபராதி மக்களின் துன்ப துயரங்களுக்கும் **நீங்களே** பொறுப்பாவீர்கள்! நீதி மற்றும் சமாதானத்தின் அடிப்படைக் கோரிக்கைகளைப் பற்றிச் சிந்தியுங்கள்! மக்களின் குரலுக்கு உங்கள் கண்களையும், காதுகளையும், இதயத்தையும் திறந்து வையுங்கள்! கோவில்கள், ஆலயங்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்களின் தலைவர்களே,

மக்களே, உங்களின் பாத்திரம் பங்களிப்புக் குறித்துச் சிந்தியுங்கள்! வழக்கறிஞர்களே, வைத்தியர்களே, கலை, சங்கீதம் மற்றும் நடன, நடிப்புத்துறை விற்பன்னர்களே, உங்களின் நிலைப்பாடு என்ன? இவர்கள் அனைவரும் மேலும் அதிக, அதிக எண்ணிக்கையில் சந்தேகமின்றி சமாதானப் பேரணியில் இணைந்து கொள்வார்கள். உண்மையில் சமாதானத்துக்காகப் பணியாற்றும் எண்ணிறந்த வழிகள் உள்ளன.

நாம் மீண்டும் சொல்லுகிறோம், சமாதானத்துக்காக இயக்கம் நடத்துவதும், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக அழைப்பு விடுவதும் மாத்திரம் போதுமானதல்ல. சமாதானத்திற்கான குறித்துரைத்த பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் நோக்குதல் வேண்டும்.சகல தரப்பினரும் மற்றவர் கூறுவதைச் செவிமடுக்கவும், உண்மையைத் தேடவும், கடந்த காலத் தவறுகளை ஏற்றுக்கொள்ளவும், மன்னிப்புக் கேட்கவும், பரஸ்பர நம்பிக்கை, உருமைப்பாடு, ஆன்மதேசம் என்பவற்றைக் கட்டியெழுப்பவும், தியாகங்கள் மற்றும் விட்டுக்கொடுப்புகளைச் செய்யவும் தயாராதல் வேண்டும். இதற்காக நாம் எமது பொதுவான ஆன்மீக வளங்களின் அடி ஆழத்துக்குச் சென்று துணிவையும், தைரியத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

"அணி திரட்டுவோம்
அனைத்து வளங்களையும்
தன்னலத் தலைவர்கள்
வழி சென்று ஏமாந்தோர்
இரு பக்கமும் உள்ளனர்
அணி திரட்டுவோம்
இவர்களின் வளங்களை
துன்பங்கள் துயரங்கள்
சுமந்தாலும் மறந்திடோம்
கருணை, மனிதாபிமானம்.
அணி திரட்டுவோம்
தர்மத்தின் வளங்களை.
கோவில், ஆலயம்,
பள்ளிவாசல், தேவாலயம்
புத்தாக்கம், ஒன்றிணைவு
நீதிக்கு, விடுதலைக்கு
மக்களின் பேரார்வம்
நிலைத்திடும் அன்பிலும்
மக்கள் புரிந்துணர்விலும்."

('மக்களுக்கு உண்மையைக் கூறுங்கள்! இலங்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு' ஒரு கூட்டு விண்ணப்பம் - 1986)

இந்த வரிகளை எழுதும்போது செய்திப் பத்திரிகைத் தலையங்கங்கள் கூறுகின்றன:

'அமெரிக்க, பிரித்தானிய துருப்புக்கள் யுத்தத்துக்குத் தயார் நிலையில்'
(டெய்லி நியூஸ். 06.10.2001)

ஆப்கானிஸ்தன் மீதான முழு அளவிலான தாக்குதலுக்காக ஆயிரக்கணக்கான துருப்பினரும், நூற்றுக்கணக்கான யுத்த விமானங்களும் தயாராகவுள்ளன. இது தடுக்கமுடியாத ஒன்று போலத் தோன்றுகின்றது.

மிதவாதப் போக்கு அவசியமென்றும், பிரச்சினையின் சகல அம்சங்களையும் புரிந்துகொள்ளும் முயற்சி வேண்டுமென்றும், உலகெங்குமுள்ள மக்களுக்குப் பெரும் துயரங்களைக் கொணரக்கூடிய நீண்டகால, இழுபறி யுத்தத்தைத் தவிர்க்க வேண்டுமென்றும் உலகெங்கிலுமிருந்தும் குரல்கள் ஒலிக்கின்றன. இந்த உலகளாவிய 'சமாதானக் உலருக்கு' எமது பங்களிப்பையும் சேர்க்கும்

விதத்தில் இக்கடிதத்தை வரைந்துள்ளோம். இலகுவான வெற்றிகளை எதிர்பார்க்கும் தவறான நம்பிக்கைகள் எம்மிடமில்லை. முடிவு எத்தகையதாகவிருந்தாலும், நாம் போராடுவது வெற்றியைச் சொந்தமாக்கும் உணர்விலாகும். என்றாவது ஒருநாள் நாம் வெல்லுவோம்.! இதன் அர்த்தம் நாம் இப்பிரச்சினை குறித்து எதுவும் செய்யத்தேவையில்லை என்பதல்ல. சகல முடிவுகளும் சட்டத்துக்கு அமைவானமையாகவும், ஐ.நா.மற்றும் ஏனைய அதிகார மட்டங்களில் எடுக்கப்படும் கூட்டுத் தீர்மானங்களாகவும் அமைதல் வேண்டும். அவை ஒரு அல்லது ஒரு சில வல்லரசுகளின் அவசரமான, தான்தோன்றித்தனமான கட்டளைகள் மூலம் செய்யப்படும் முடிவுகளாக இருக்கக்கூடாது.

ஆயினும், எமது பிரதான அர்ப்பணிப்பு எமது சொந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவது சம்பந்தமானதாகும். எமது சொந்த சமாதான இயக்கத்துக்கு உலகெங்கிலுமுள்ள முற்போக்கு சமாதான இயக்கங்களின் ஒருமைப்பாட்டை நாடி நிற்கிறோம்.

வண. மஹாகல்கடவெல
புண்ணியசார தேரோ

எம்.கே. செல்வராஜா
இணைக் காப்பாளர்

என்.எம்.எம்.ஐ. ஹுசெய்ன்
இணைக் காப்பாளர்

டல்சி சில்வா
இணை - கூட்டிணைப்பாளர்

வண. யொஹான் தேவானந்த
இணை - கூட்டிணைப்பாளர்

நிமல் முனசிங்க
இணைச் செயலாளர்

**இலங்கையில் நீதிக்கும், சமாதானத்துக்குமான உலக ஒத்துழைப்பு மன்றத்தின்**
**இலங்கைக் குழுவின் (டபிள்யூ எஸ் எவ் / எஸ்.எல்) சார்பில்**

06.10.2001

17/2, திலகா கார்டின்ஸ்
நுகேகொட - 10250
இலங்கை

தொலைபேசி : 94-(0)1-852370. பாக்ஸ் : 94-(0)74-300103.

மின்அஞ்சல் : **ahimsasl @ sltnet.lk**

இணையத்தளம் : **www.wsf-sl.org**

இலங்கையிலும் வெளிநாடுகளிலிருந்து கருத்துரைகள், விமர்சனங்கள் மற்றும் ஒருமைப்பாட்டு உணர்வுகளை வரவேற்கிறோம். தயவுசெய்து இவற்றை மேற்காணும் முகவரியிலுள்ள WSF/SL கூட்டிணைப்பாளர் வண. யொஹான் தேவானந்த அவர்களுக்கு அனுப்பி வையுங்கள். விரும்புவோர் மேற்கூறிய முகவரியிலுள்ள அலுவலகத்தில் எம்மைச் சந்திக்கலாம்.

இக்கடிதத்தில் கையாளப்பட்டுள்ள கருப்பொருட்களும், பிரச்சினைகளும் மேலும் ஆழமாகப் பின்வரும் WSF/SL பிரசுரங்களில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

1. அதிகாரப் பகிர்வு : எமது காலத்தின் சவால்கள், வரலாற்றுப் பின்னணியும், பகுப்பாய்வும். ஆய்வு ஆவணம் (200/= ரூபா 5$ தபாற் செலவு உள்ளடங்கலாக).

2. அதிகாரப் பகிர்வு : எமது காலத்தின் சவால்கள், நிலைமை அறிக்கை, பகுப்பாய்வு மற்றும் செய்தி. (100/= ரூபா. 3$ தபாற்செலவு உள்ளடங்கலாக).

மூன்று மொழிகளிலும் கிடைக்கும் (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) வாங்க விரும்புவோர் உலக ஒத்துழைப்பு மன்றம் / இலங்கைக் குழு என்னும் பெயருக்குக் காசோலை ஒன்றை அனுப்பிவைக்கலாம். (பணம் பெறவேண்டியவரின் கணக்குக்கு குறுக்கே கோடிடப்பட்ட காசோலை) அல்லது அருளானந்தன் டீஸ்டீபன், WSF/SL என்ற பெயருக்கு நுகேகொடை தபால் கந்தோருக்குக் காசுக் கட்டளை ஒன்றை அனுப்பிவைக்கலாம்.

இந்தக் கடிதம் அல்லது இதன் ஏதாவது ஒரு பகுதி எந்தப் பத்திரிகையிலும், சஞ்சிகையிலும் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்யப்படலாம். அதைச் செய்கையில் எமக்கு அறிவிக்கவும்.

**பிற்குறிப்பு**

இதை எழுதிய பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. (அக்டோபர், 10) பொதுத்தேர்தல் வரவுள்ளது. உலகில் அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் ஆப்கானிஸ்தானில் அக்டோபர் 7ஆந் திகதி போர் தொடங்கியுள்ளார்கள்.

ஆயினும், இங்கு இக்கடிதத்தில் கூறப்பட்டுள்ள கண்ணோட்டங்கள், பிரச்சினைகள் மற்றும் வலியுறுத்தப்பட்ட முன்னுரிமைகள் இன்னமும் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் இயைபுடையனவாகவே உள்ளன.

இலங்கையில் நிகழவிருக்கும் தேர்தல் பிரசாரத்தில் முக்கியமான தெரிவு குறுகிய, குழுவாத, அரசியல் நன்மைகளுக்கும், உண்மையான இராஜதந்திரத்தோடு கூடிய பரந்த சமாதானம், குறித்த இங்கு சகல ஜனசமூகங்களுக்கும் நீதி உறுதிப்படுத்தக்கூடிய இலட்சிய தரிசனத்துக்குமிடையிலான ஒன்றாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் தமது தலைவர்களைச் சமாதானத்துக்கான பொறுப்பான நிலைப்பாட்டை எடுக்கும்படி கோரி, அத்தகைய நிலைப்பாட்டை எடுப்போருக்கு மாத்திரம் தமது வாக்குகளை அளித்தல் வேண்டும். இதனால் தேர்தல் முடிந்த பின்னர் மக்களும், தலைவர்களும் அவசரமான, தொடர்ச்சியான சமாதானத்துக்காக ஆக்கபூர்வமான கூட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமாகும்.

இறுதியாக, இது ஒரு பிற்குறிப்பு என்ற போதிலும், இக்கடிதத்தில் இதற்கு முன்னர் போதிய அளவில் வலியுறுத்தப்படாத ஓர் எளிமையான உண்மையை வலியுறுத்துவதற்கு மிகச் சிறந்த இடமென்று நாம் கருதுகிறோம். இந்த உண்மை இன்னமும் அனேகரால் விளங்கிக்கொள்ளப்பட வில்லை. இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்கும் வரையில் (அதற்கு அரசியலமைப்பு மாற்றம், சமூக மாற்றம்மற்றும் யுத்தத்துக்கு முற்றுப்புள்ளி என்பவை அவசியப்படும்.)

பெண்களுக்கெதிரான வன்முறை, பல்கலைக்கழகங்களில் வன்செயல், பொதுவாழ்வில் ஊழல் மற்றும் பொதுவான பொருளாதார, சமூக மற்றும் மதவாழ்க்கையில் சீரழிவு போன்ற எம்மை எதிர்நோக்கும் ஏனைய தீவிர பிரச்சினைகளையும் தீர்க்க முடியாது போகுமென்பதே இந்த உண்மையாகும். இறுதியாக இருந்த அரசாங்கத்தைப் பற்றி, அதன் தீவிர ஆதரவாளர்களாக இருந்தவர்களே, இதுகாலவரை இருந்த அரசுகளில் மிகவும் கேவலமான ஊழலும், சுயநலப் பேராசைச் செயல்முறைகளும் கொண்ட அரசென்று வர்ணித்துள்ளனர். மேலே வலியுறுத்தப்பட்டுள்ள மாற்றங்களை ஏற்படுத்தினாலன்றி, இதற்குப் பிறகு ஆட்சிக்கு வரப்போகும் எந்த அரசாங்கமும், இதை விடச் சிறந்ததாக இருக்க வழியிருக்காது. வேறு வார்த்தைகளில் கூறுவதாயின், எதிர்கால அரசாங்கங்களிலுள்ள தலைவர்கள் எவ்வளவு தான் "உன்னதமானவர்களாகவும், உயர்தகைமை கொண்டவர்களாகவும்" இருந்த போதிலும், இனப்பிரச்சினை தீர்க்கப்பட்டு, யுத்தம் நிறுத்தப்படாதவரை அவை மேலும் ஊழல் மற்றும் சுயநலப் பேராசை கொண்டவையாகவே விளங்கும்.

**டபிள்யூ.எஸ்.எப்/எஸ்.எல்.**
**11.10.2001**

## பயனுறுதியுள்ள பிரதிச் யெற்பாடு

*"விடயங்கள் ஒரு காரணத்துக்காகவே சம்பவிக்கின்றனவென்று நீங்கள் நம்புகிறீர்களா? அப்படியானால், அமெரிக்கா மீதான தாக்குதலுக்குக் காரணம் என்ன?*

எமது தற்போதைய நிலைமைக்கான ஆழமான காரணம் எமது நுகர்வுப் பாங்கு ஆகும். அமெரிக்கக் குடிமக்கள் உலக சனத்தொகையில் 6 வீதமாகவுள்ளபோதிலும், அவர்கள் உலகின் சக்தி மூலவளங்களில் 60 வீதத்தை நுகர்வு செய்கின்றனர். அமெரிக்காவின் சிறுவர்கள் அடிப்படைப் பாடசாலைக் கல்வியை முடிக்கு முன்னர் தொலைக்காட்சியில் 100,000 வன்செயல் காட்சிகளைப் பார்க்கின்றனர். எமது தற்போதைய நிலைமைக்கு இன்னுமொரு காரணம், எமது வெளிநாட்டுக் கொள்கையும், எமது உறவுகளினுள் நாம் விடயங்களை ஆழமாகச் செவிமடுக்காமையும் ஆகும். ஏனைய தேசங்களிலுள்ள மக்களின் துயரங்கள் மற்றும் அவர்களின் உண்மையான தேவைகளைப் புரிந்துகொள்ளும் வகையில் அவர்களின் குரலுக்கு நாம் ஆழமாகச் செவிசாய்ப்பதில்லை."

*இந்த அவல நிலைக்கு மிகவும் பயனுறுதியுள்ள ஆன்மீகத் தீர்வு என்னவென்று நினைக்கிறீர்கள்?*

நாம் இப்பொழுதுதே எமது கோபத்தைத் தணித்து, எமது சமுதாயத்திலும், உலகத்திலுமுள்ள வெறுப்புணர்வு, மற்றும் வன்செயலின் வேர்களை, அறிந்துகொள்வதற்கு செவிமடுக்கவும், புரிந்து கொள்ளவும் முயற்சி செய்யும் நடைமுறையை ஆரம்பித்தல் வேண்டும். எமது இதயங்களிலும், மனங்களிலும் ஒரு துளி இரக்கம் பிறக்கும்போது எமது நிலைமைகளுக்கான திட்டவட்டமான பிரதி விளைவுகளை நாம் காட்டத் தொடங்குவோம். நாம் ஆழமாகச் செவிமடுத்து, ஆழமாக நோக்கும்போது சகல தேசங்களுக்குமிடையிலான சகோதர உணர்வு அபிவிருத்தியடையும். இதுவே சகல மதங்களினதும், கலாசார பாரம்பரியங்களினதும் ஆழமான, ஆன்மீக மரபுக் கொடையாகும். இதன்மூலம் உலகம் முழுவதிலும் விளக்கமும், அமைதியும் தினமும் விருத்தியுறும்.

**(இப்பொழுது அமெரிக்காவில் வசிக்கும் சென் பாரம்பரியத்தைச் சேர்ந்த வியட்நாமிய பௌத்த மதகுரு வண.திச் நாட் ஹான், ஆன் ஏ.சிம்ப்கின்சனுக்கு அளித்த பேட்டி - "ஐலண்ட", 17.10.2001)**

பின் பகுதி சித்திரம்
மரவேலைப்பாடு : சரணாகதியினர்
சொலமன்ராஜ், இந்தியா

ஓர் தாயும் தந்தையும் ஓர் குழந்தையுடன் தங்களுக்கு அருகாமையிலுள்ள தண்ணீர் குவலையோடு அமர்ந்திருக்கின்றனர். ஓர் மனிதன் காயப்பட்ட கைகளுடன் முள்முடி கிரீடம் அணிந்து அவர்களுக்கு பின்னால் அமர்ந்து, ஒருங்கிணைபவனாக கைகளை முன்னால் கோர்த்த வண்ணம் காணப்படுகிறான்.

